பக்கங்கள்:23 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை 03.04.2022 கதிர் 149

### இனி இது ரகசியம் அல்ல!

நாட்டைத் தன்னால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்று கூறி, அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது தன்னையும் தனது அரசையும் பாதுகாப்பதற்கு ஊரடங்கு போட்டு நாட்டை முடக்க வேண்டிய இக் கட்டுக்குள் மாட்டிக் ☞2

# தலவாக்கலையில் இன்று திட்டமிட்டபடியே பேரணி

## நடக்கும் என மனோ கணேசன் துணிச்சல் அறிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 03

தலவாக்கலையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பேரணி இன்று ஞாயிறன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். கூட்டணி தலைவர்களுடன் சிறப்பு அதிதிகளாக எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ராஜித சேனாரத்ன எம்.பி. ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். இதில் அணி திரண்டு கலந்து கொள்ளும்படி அனைவரையும் தமிழ் முற்போக்கு கூட்டணி அழைக்கிறது.

– தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று இத்தகைய அரசியல் துணிச்சல் மிக்க அறிவிப்பை வெளியிட்டார். ☞21

## பாடசாலை விடுமுறை அறிவிப்பு

ஏப்ரல் 4ஆம் திகதி முதல் மாணவர்கள் பாடசாலைக்கு வர வேண்டுமா இல்லையா என்பதை பாடசாலை அதிபர்களே முடிவு செய்யலாம் என கல்வி அமைச்சு கூறுகிறது.

அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் தலைமையாசிரியர்கள் ஏப்ரல் 4 – 8 ஆம் திகதி வரை பரீட்சைகள் இடம்பெறுவதால் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பது தொடர்பில் அதிபர்கள் தீர்மானிக்க ☞21

## இன்று ஒன்று கூடத் தடை! வர்த்தமானி வெளியானது

அவசரகாலச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று வெளியிடப்பட்டது. ☞21

## கொழும்பில் நேற்று முன்னிரவிலும் ஊரடங்கை மீறி மக்கள் நடமாட்டம்

நேற்று மாலை 6 மணி முதல் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த போதும் கொழும்பு உட்பட தென்னிலங்கையின் பல பிரதேசங்களிலும் முன்னிரவில் மக்கள் நடமாட்டமும் போக்குவரத்தும் மிகத் தாராளமாக இருந்தன. ☞21

## மின்வெட்டு குறைக்கப்பட்டது இன்று 1 மணி 40 நிமி. மட்டுமே

இன்று நடமுறைப்படுத்தப் பட விருந்த மின்வெட்டு கால எல்லைகுறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இன்று 6 மணித்தியாலம் மின்வெட்டு ☞21

## அடங்கியது குடாநாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.03

நாட்டில் பிரப்பிக்கப்பட்ட திடீர் ஊரங்கினால் நேற்று இரவு 8 மணிக்கு முன்பே யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக அடங்கியது.

எரிபொருள தட்டுப்பாடு காரணமக எரிபொருள் விற்பனை நிலையங்களில் தினமும் நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள் மட்டும் அன்றி நகரின் மத்தியில் இருக்கும் முக்கிய உணவகங்களும் மூடப்பட்டு ☞21

## போராட்டங்களுக்கு அஞ்சி ஊரடங்கு போட்டது அரசு!

### நேற்று மாலை 6 மணி முதல் நாளை காலை வரை

நாடளாவிய ரீதியில் நேற்று சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் மக்களை வீதிகளில் இறக்கி பெருத்த எடுப்பில் அரசஎதிர்ப்புப்போராட்டங்களை முன்னெடுக்க எதிர்க்கட்சிகள் தயாரான நிலையில் அதற்கு முகம் கொடுக்க ☞21

### கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரான

## ஞானாக்காவைப் பாதுகாக்க விசேட அதிரடிப்படை குவிப்பு



கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரான ஞானாக்காவின் அநுராதபுரம் ஆலயத்தைப் பொது மக்கள் சுற்றி வளைத்துள்ளனர் என நேற்று மாலை தகவல் வெளியாகி உள்ளது.

அந்த ஆலயத்திற்கு கோட்டாபய செல்லவுள்ளார் என்ற தகவல் அறிந்தேஅதுசுற்றிவளைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிருணிகா பிரேமச்சந்திரா தலைமையிலான ☞2

## உயர்தரப் பரீட்சை ஒக்டோபருக்கு ஒத்திவைப்பு

2022 கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை எதிர்வரும் ஒக்டோபரில் நடத்துவதற்கும், டிசம்பரில் இடம்பெற வேண்டிய சாதாரண தர பரீட்சைகளை 2023 ஜனவரியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பிரணவதாசன் தெரிவித்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக நிலவிய கொவிட் ☞2

## இ.தொ.காவும் வெளியேறுகிறது

### ஜீவன் தொண்டமான் அறிவிப்பு



மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறை வேற்றப்படாவிட்டால் அரசாங்கத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறும் என்றும், இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும் என்றும், ☞2

EDUS Online School with GLOBAL STANDARDS
சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!
English & Tamil Medium
அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.
தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L
Enroll Now
Admissions
www.edus.lk
0777 123 330
அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு இருக்கின்றார்.

நேற்று முன்தினம் அரச நாடாளுமன்றக் குழுவின் விசேட கூட்டத்தை ஜனாதிபதி கூட்டினார். பிரதமர், நிதியமைச்சர் உட்பட ஆக 75 எம்.பிக்கள் மட்டுமே கூட்டத்திற்கு சமுகம் கொடுத்தனர். அது, அரசுத் தலைமையை அசர – அதிர – வைத்து விட்டதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சிகள் இன்று நடத்த உத்தேசித்திருந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல்தான் அரசுத் தலைவர் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி, ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தார் என்பது அப்பட்டமான உண்மை.

ஆனால் அதற்கு மேலும் பல விடயங்கள் இதற்குள் புதைந்து இருக்கின்றன.

எதிரணிகள் தாம் அறிவித்த மக்கள் எழுச்சிப் போராட்டங்களை எங்கெங்கு நடத்த போகின்றன என்பதைக் கடைசி வரையில் வெளிப்படுத்தவில்லை. நாடு முழுவதிலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்ற நிலைமை. அவை நடக்கும் இடம் தெரியாமல் பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்வது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது, படையினர் மற்றும் பொலிஸாரை அந்த இடங்களுக்கு நகர்த்துவது போன்றவை இயலாத காரியம். போதாக்குறைக்கு எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாடு, மின்வெட்டு, விலைவாசி உயர்வு போன்றவற்றின் சீற்றத்தில் இருக்கும் பொது மக்கள், எங்கு ஆர்ப்பாட்டம் நடந்தாலும் அங்கு ஒன்று திரளுவதற்குத் தயாரான நிலையில் இருக்கின்றார்கள் என்ற உளவுத் தகவல்கள் அரசுத் தலைமைக்குக் கிடைத்துள்ளது.

அது மாத்திரமல்ல, பல வீடுகளிலும் மின்வெட்டினால் மின்விசிறிகள் கூட இயங்காத நிலைமை. வீட்டுக்குள் வெக்கையில் வாடி வதங்கிக் கிடக்கும் மக்கள், போராட்டத்துக்கு என்ற பெயரிலாவது பொதுவெளிக்குப் போய்த் தங்கள் ஆற்றாமையைத் தீர்த்துக் கொள்வோம் என்ற மனநிலையில்தான் இருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டபடி இன்று மக்கள் போராட்டங்களை நடத்த அனுமதித்தால் அது 'அரபு வசந்தம்' போல மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றிய சிலர் ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டினர். ஆனால் ஆரம்பத்தில் ஊரடங்கு பிறப்பிக்கும் முடிவுக்கு ஜனாதிபதி இணங்கவில்லை.

இன்றைய எழுச்சி ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதித்தால், அவற்றுக்காக ஒன்றுகூடும் மக்கள் தத்தம் பிரதேசங்களில் தங்கள் வீடுகள், அலுவலகங்கள், கட்டடங்கள், சொத்துகளை நோக்கிப் படையெடுத்து அராஜகம் செய்யும் ஆபத்தும் இருக்கிறது என்று அமைச்சர்களும் அரசுத் தரப்பு எம்.பிக்களும் அழாத குறையாக எடுத்துக் கூறினராம். அதன் பின்னரே ஊரடங்கைப் பிறப்பிக்க ஜனாதிபதி இணங்கினார். எனினும் அவர் ஓர் எச்சரிக்கையைக் கொடுக்கத் தவறவில்லை.

'நீங்கள் வலியுறுத்திக் கேட்பதால் இணங்குகிறேன். மக்கள் அந்த ஊரடங்க மீறி தம்பாட்டில் வீதிக்கு இறங்கினால் என்ன செய்வது?' என்று கேட்டார் ஜனாதிபதி. அங்கிருந்த ஒருவரிடமும் பதில் இருக்கவில்லை.

ஏற்கனவே 145 எம்.பிக்களை கொண்ட அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு இந்த நெருக்கடிக்கு மத்தியில் அறிவித்தும் ஆக, 75 எம்பிக்களை வந்திருந்தனர். இந்த சூழ்நிலையில் மக்களின் எழுச்சி போராட்டம் முழு அளவில் வெடித்தால அரசின் செல்வாக்குச் சரிய, மேலும் பல எம்.பிக்கள் அரசுத் தரப்பிலிருந்து வெளியேறுவார்கள் என்று கூறப்படுகின்றது.

அதனால் கோட்டாபய அரசு நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையை இழப்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது. அடுத்துக் கிடைக்கும் முதல் வாய்ப்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும், பின்னர் அரசுக்கும் எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்வதில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில அணி தீவிரமாக இருக்கின்றது.

இன்று மக்கள் போராட்டம் பெரிய அளவில் வெடித்து, அரசுக்கு எதிரான சீற்ற உணர்வு பரவுமானால் நிச்சயம் அரசு பெரும்பான்மையை இழந்துவிடும், அது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இத்தகைய அசௌகரிய நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நாடாளுமன்றத்தை உரிய சமயத்தில் ஒத்திவைக்கும் திட்டத்தோடு ஜனாதிபதி இருக்கின்றார் என்று தெரிகிறது. அரசுக்கு அல்லது நிதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கான முஸ்தீபுகள் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டால் உடனடியாகவே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்தி வைப்பார் எனத் தெரிகின்றது.

ஆகக் கூடியது அப்படி இரண்டு மாத காலத்துக்குத்தான் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்க முடியும்.

அந்த இரண்டு மாதல் காலகட்டத்துக்குள் நாட்டின் நிதி நிலைமையையும் ஏனைய விடயங்களையும் சரி செய்து, சுமூகநிலையைஏற்படுத்திக்கொண்டால், தமது அரசைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருதுகின்றார்.

சாணக்கியம் நிறைந்த அவரது இந்தச் சதுரங்கக் காய் நகர்த்தல் அவருக்கு சரிப்பட்டு வருமா என்பதை அடுத்த ஒரு வாரத்துக்குள் நாங்கள் ஊகித்து முடிவெடுத்துக் கொள்ள முடியும். இலங்கையின் சமகால அரசியல் வரலாற்றில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள இன்றைய தினம் மிக மிக முக்கிய வரலாற்று திருநாளாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

– மின்னல் –

## இ.தொ.காவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று அறிவித்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியால் தலவாக்கலையில் இன்று முன்னெடுக்கப்படவிருந்த போராட்டத்தை தமது கட்சி எதிர்க்கவில்லை எனவும், அதனை ஆதரிக்கும் என்றும் ஊரடங்கு உத்தரவு வெளியிடப்பட முன்னர் அவர் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு:–

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசின் பங்காளிக் கட்சியாக இருந்தாலும், மக்களை பாதுகாப்பதே எமது முதன்மை நோக்கமாகும். அந்த வகையில் ஜனாதிபதியின் வீட்டுக்கு செல்லும் மிரிஹான வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்கள் மீது நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தவறான செயலாகும். என்னதான் வதந்திகள் பரவினாலும், முறையான விசாரணையின்றி மக்களைக் கைது செய்து, துன்புறுத்துவது நியாயம் அல்ல.

மக்களின் போராட்டங்களுக்கு இ.தொ.கா. எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் சமையல் எரிவாயு, எரிபொருள் இன்றி மக்கள் இன்று துன்பப்படுகின்றனர். இதற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர். அதன் பின்னணியில் எந்த கட்சி இருந்தாலும் நாம் அதற்கு ஆதரவு.

மிரிஹான போராட்டத்தின் போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும் கண்டிக்கின்றோம். அது நியாயமற்ற செயலாகும். மக்களுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசுக்கு எமது எதிர்ப்பை காட்டிவிட்டோம். சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணித்தோம். ஆனால் அமைச்சு பதவி கிடைக்கவில்லை என்பதால்தான் இ.தொ.கா. இப்படி செயற்பட்டது என சிலர் வதந்தி பரப்பினர். இராணுவத்துக்காக 10 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகம் அமையவுள்ள இடமும் உள்ளடங்குகின்றது. இதனை நாம் எதிர்த்தோம்.

மக்களுக்குரிய வேலைகள் நடக்க வேண்டும். நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு சார்பான முடிவையே நாம் எடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல்போனால் அரசாங்கத்திலிருந்து காங்கிரஸ் வெளியேறும். இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும். – என்றார்.

## உயர்தரப் பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சுறுத்தலால் தேசிய பரீட்சைகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக சகல பரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் மூன்று மாதங்கள் என்ற குறுகிய கால இடைவெளியில் மீண்டும் ஓகஸ்டில் உயர்தர பரீட்சைகளை நடத்த முடியாது என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சைகள் மே மாதம் 21 ஆம் திகதி முதல் ஜூன் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இவ்வாண்டுக்கான உயர்தர பரீட்சைகள் ஒக்டோபர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஞானாக்காவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய பெண்கள் சக்தியினர் ஞனாக்காவின் ஆலயத்தை சுற்றிவளைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஜனாதிபதியின் ஆஸ்தான ஜோதிடரான ஞானக்காவைப் பாதுகாப்பதற்காக அனுராதபுரம் ஆலயத்திற்கு அருகில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.





ஞானாக்காவின் பராமரிப்பில் இருக்கும் காளி ஆலயத்தில் ஆன்மீக அமைதி தேடி கோட்டபாய அடிக்கடி அங்கு சென்று வருவது வழமை. இந்நிலையிலேயே கோட்டாபய ஆலயத்திற்கு வரவுள்ளார் என்ற தகவலின் பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு திரண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அந்த இடத்தில் ஏராளமான காவல்துறையினர் மற்றும் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அநுராதபுரத்தில் ஆங்காங்கே பல எதிர்ப்பு பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# மரண அறிவித்தல்



## திருமதி கலாநிதி சிறிமோகன்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநிதி சிறிமோகன் அவர்கள் நேற்று (02/04/2022) சனிக்கிழமை இயற்கை அடைந்தார்.அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம், அம்பிகாதேவி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் பத்மாவதி தம்பதியினரின் மருமகளும், ஸ்ரீமோகனின் அன்பு மனைவியும் சேயோன், கஜன், அபிராம் ஆகியாரின் பாசமிகு தாயாரும் மாதங்கியின் அன்பு மாமியாரும் அகன்யனின் அன்பு அப்பம்மாவும் செல்வராணி, பேரின்பரஜனி, கணேஸ்வரி, மாலினிதேவி காலஞ்சென்ற பத்மினிதேவி மற்றும் செல்வராஜா, மோகன்ராஜா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீகாந்தன், ஸ்ரீகரன் மற்றும் ஸ்ரீரஞ்சன், ஞானகௌரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03/04/2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுதென்மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல் – குடும்பத்தினர்
0774007248

# அறிவுறுத்தல்களை மீறி வெளிநாட்டு நாணயங்கள் மாற்றுவோருக்கு எதிராக மத்தியவங்கி நடவடிக்கை

அறிவுறுத்தல்களை மீறி வெளிநாட்டு நாணயங்களை மாற்றுபவர்களுக்கு எதிராக தொடர்ந்து ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்று நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, கொழும்பில் அங்கீகாரம் பெற்ற நாணய மாற்று நிறுவனங்கள் இரண்டு மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதத்தை விட அதிக விலைக்கு வெளிநாட்டு நாணங்களை விற்பனை செய்துள்ளமை தெரியவந்தது.

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அவர்கள் மீறியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் உரிய உத்தரவுகளுக்கு இணங்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அங்கீகரிக்கப்பட்ட பணம் மாற்றுபவர்கள் எச்சரிக்கைகளை சரி செய்யத் தவறினால், அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இலங்கை மத்திய வங்கி இடைநிறுத்தி அல்லது ரத்து செய்யும்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி இளம்தாய் பரிதாபக் கொலை

தெனியாய – கொட்டப்பொல மெதகொடஹேன, நாரன்தெனிய, கொஸ்மோதர பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளம் தாயொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை கணவன், மனைவிக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக கணவரால் மனைவி குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் மூத்த மகனால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, காயமடைந்த பெண் அம்புலன்ஸ் மூலம் தெனியாய ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த பெண் 5 பிள்ளைகளின் தாயான 36 வயதுடையவரெனவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தெனியாய வைத்தியசாலையில் இருந்து மாத்தறை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான, உயிரிழந்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ளமையுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொஸ்மோதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 17.12.1993 மதம் - இந்து
ஜாதி - -V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 18 செவ்/சூரி 10 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor (Australia)
எதிர்பார்ப்பு - Doctor, Eng இலங்கை அவுஸ்ரேலியா மணமகன்

பிறந்த திகதி - 26.07.1992 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 2 இல்
கி.பா - 17 செவ் 4 இல்
தகைமை - B.Sc, B.Com தொழில் - Bank officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 19.05.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - அச்சுவினி 4 இல்
கி.பா - 5 செவ் 8 இல்
தகைமை - B.Com தொழில் - Bank officer
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 31.07.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 3 இல்
கி.பா - 53 செவ் 7 இல்
தகைமை - B.A தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை உயர்பதவி மணமகன் தேவை

பிறந்த திகதி - 01.09.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 4 இல்
கி.பா - 16 செவ் 11 இல்
தகைமை - B.Sc, M.Sc தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - Doctor, Eng அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 11.07.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவாதிரை 3 இல்
கி.பா - 23 செவ் 9 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - Company
எதிர்பார்ப்பு - France, OR Swiss PR உள்ள மணமகன்

பிறந்த திகதி - 26.11.1992 மதம் - இந்து
ஜாதி - K பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 76 செவ் 7 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - Company
எதிர்பார்ப்பு -அரச சேவை, தனியார் மணமகன்

பிறந்த திகதி - 12.01.1992 மதம் - இந்து
ஜாதி - K பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 17 செவ்/சூரி 2 இல்
தகைமை - Bio தொழில் - N.G.O
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 02.01.1989 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - விஸ்வகுலம்
கி.பா - 18 செவ் - 5 இல்
தகைமை - Civil Eng தொழில் -T.O அரசசேவை
எதிர்பார்ப்பு - வெளிநாட்டு PR உள்ள மணமகள் தேவை

பிறந்த திகதி - 26.12.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 34 செவ் - 5 இல் தகைமை -G.C.E A/L
தொழில் - Electricity Board அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி - 09.10.1987 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 12 செவ் - 3 இல் தகைமை - B.Sc Surveyring
தொழில் - அளவையாளர் திணைக்களம் அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள் தேவை

பிறந்த திகதி - 18.09.1987 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பூசம் 2 இல்
கி.பா - 28 செவ் 10 இல்
தகைமை - Civil Eng தொழில் - Civil Eng சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை

பிறந்த திகதி - 22.05.1985 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - மிருகசீரிடம் 4 இல் கி.பா - 8 செவ்/சூரி 10 ல்
தகைமை - Industrial engineer தொழில் - Engineer Dubai
எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாட்டு, வெளிநாட்டு மணமகள்

பிறந்த திகதி - 23.03.1984 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 29 செவ் 6 இல்
தகைமை - G.C.E (A/L) தொழில் - Commission Agency
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் தேவை

பிறந்த திகதி - 06.05.1981 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 23 செவ்/சூரி 2 இல்
தகைமை - B.Com தொழில் - D.O கச்சேரி
எதிர்பார்ப்பு - அரசசேவை

பிறந்த திகதி - 28.04.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - சதயம் 3 இல்
கி.பா - 22 செவ் 3 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor (Australia)
எதிர்பார்ப்பு - Doctor, Engineer இலங்கை

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.












காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அவதானம் அவசியம்

**பொருளாதார நெருக்கடியும், விலைவாசி உயர்வும், எரிபொருள் – எரிவாயு பற்றாக்குறையும், மின்வெட்டும் தென்னிலங்கையில் பெரும் கிளர்ச்சியாக – புரட்சிக்கு முன்னோடியான எழுச்சியாக – தோற்றம் பெற்றுள்ளன.**

**ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தும் கருத்துகள் தீவிரம் பெற்றிருக்கின்றன. அத்தரப்புகளை அடக்கி, ஒடுக்க அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன் கீழ் ஊரடங்குச் சட்டத்தையும் அறிவித்துள்ளார்.**

**இந்தப் பிரச்சினையை எப்படிக் கையாள்வது, எப்படி அணுகுவது என்பது தொடர்பில் தமிழர் தேசத்திடமோ, அதன் தலைமைகளிடமோ – ஏன் தமிழ் மக்களிடமோ – ஒரு தெளிவு, பார்வை இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களும் தலைவர்களும் இரண்டுங் கெட்டானான ஒரு குழப்ப நிலையிலேயே உள்ளனர்.**

**ஆட்சி மாற்றத்துக்குத் துடியாய்த் துடிக்கும் தென்னிலங்கைத் தரப்புகளின் பக்கம் செல்வாக்குக் காற்று வீசுவது போன்ற ஒரு தோற்றம் தென்படுவதால் தமிழர் தேசமும் முழு முனைப்பாக அந்தப் போக்கில் இறங்குவதா அல்லது பெரும்பான்மை மக்களின் அந்த நிலைப்பாட்டுக்கு ஒரு தார்மீக ஆதரவை வழங்குவதுடன் தள்ளி நிற்பதா என்ற கேள்வி எழுகின்றது.**

**இந்தப் பிரச்சினையைத் தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும் கவனமாகக் கையாள வேண்டும். அது ஏனைய சிறுபான்மையினத்தவர்களான முஸ்லிம்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் கூடப் பொருந்தும்.**

**இப்போது தென்னிலங்கை மக்களின் கடும் எரிச்சலுக்கும் சீற்றத்துக்கும் உள்ளாகியிருக்கும் இந்த ஆட்சிப் பீடத்தை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தமையில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ, மலையகத் தமிழர்களுக்கோ தொடர்பேதுமில்லை. பௌத்த, சிங்கள மக்களே வெறும் பேரினவாத வெறிப்போக்குப் பிரசாரத்துக்கு எடுபட்டு இந்தத் தரப்பினரை ஆட்சிப் பீடத்தில் ஏற்றினர்.**

**தனது பிரதான இலக்கான – நோக்கமான – பௌத்த, சிங்களப் பேரினவாத நலனை முன்னிறுத்தி செயற்படுத்தல் என்ற கருத்தில் இருந்து இந்த அரசு இன்னமும் விலகி விடவில்லை. அதில் முனைப்பாக – மிக முனைப்பாக – தீவிரமாக – செயற்பட்டு வருகின்றது.**

**ஆனால், ஆட்சிப் பீடத்துக்கு இந்த அரசைக் கொண்டு வந்தவர்கள் எதிர்பார்க்காத ஒரு பக்கத்தில் இருந்து அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. அது – பொருளாதார விடயங்களைக் கையாளும் துறையில் நிர்வாகச் சீரின்மையும் குளறுபடியும் என்ற சிக்கல்.**

**அதன் விளைவு வயிற்றைக் கடித்த போது – 'பொக்கட்டைச்' சூறையாடிய போது – மக்களின் அடிப்படை வசதி, வாய்ப்புகளைப் பிடுங்கிய போது – அதற்கு எதிராகச் சீற்றத்துடன் குமுறும் நிலைமை தென்னிலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்றது.**

**'நீங்கள் பேரினவாத வெறிப் போக்குப் பிரசார மாயையில் எடுபட்டு, நாட்டைக் குட்டிச் சுவராக்கும் ஒரு தரப்பிடம் அதிகாரத்தைக் கண்ணை மூடிக் கொண்டு வழங்கியதன் விளைவுதான் இன்றைய நாட்டு நிலைமை' என்பதை தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்களுக்கு நாகரிகமான முறையில் விளங்கப்படுத்தி, தெளிவுபடுத்துவதுதான் நமது கடமையாக இருக்க முடியும். இருக்க வேண்டும்.**

**தீவிர இனவெறிப் போக்குடைய இந்த அரசு அதிகாரத்தில் இருந்து துரத்துப்படுவது முக்கியம். ஆனால் அதில் சிறுபான்மையினர் அதீத ஈடுபாடு காட்டினால், மீண்டும் தென்னிலங்கையில் இனவாதத்தைக் கிளப்பி, அதனை ஒரு சாட்டாக வைத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இந்த ஆட்சிப் பீடம் நிச்சயம் முயலும்.**

**அரசுக்குள் பேரினவாதத்தை உச்சமாகக் கிளப்பி நின்ற தரப்புகளே இப்போது வெளியே வந்து அரசை வீழ்த்தும் செயலில் ஈடுபட்டிருக்கின்றன. அதனால் இவ்விடயத்தில் பக்கம் சார்வதில் சிறுபான்மைத் தரப்புகள் அதீத கவனமாக இருக்க வேண்டும்.**

## கடுமையான அச்சத்தில் தென்னிலங்கை அமைச்சர்கள் தம்மைக் காப்பாற்றுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

அரசின் செயற்பாடுகள் காரணமாக மக்கள் கொந்தளித்துள்ள நிலையில் தமது வீடுகளும் தாக்கப்படும் என அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.

இந்நிலையில் உடனடியாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துமாறும் இல்லை என்றால் இன்று (ஞாயிற்றுகிழமை) இடம் பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தின் போது தங்கள் வீடுகளும் சுற்றிவளைக்கப்படும் என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஆளுங்கட்சியின் விசேட குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு அனைத்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், 75 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர் எனத் தெரியவந்துள்ளது. ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் விமல் அணியினர் கலந்து கொள்ளவில்லை.

இந்தக் கலந்துரையாடலின் போது சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுவதற்கு ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கிய போது அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தமது அச்சத்தைத் தெரிவித்துள்ளனர். எனினும் மக்கள் ஊரடங்குச் சட்டத்தை மீறினால் என்ன நடக்கும் என ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது எனவும் டொலர் பிரச்சினைக்கு தீர்வுகாணத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஷிரந்தி ராஜபக்ஷவுக்கும் நுவரெலியாவில் எதிர்ப்பு!

நுவரெலியா, ஏப். 03

நுவரெலியாவில் மலர், செடிகள் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதற்காகச் சென்ற ஷிரந்தி ராஜபக்ஷவிடம் மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

நுவரெலியாவிற்கு மலர் செடிகள் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கவிருந்தது. அந்நிகழ்வை ஆரம்பித்து வைப்பதற்காக ஷிரந்தி ராஜபக்ஷ அங்கு சென்றிருந்தார்.

இதன்போது அரலியா ஹோட்டல் பெற்றோல் கொட்டகைக்கு அருகில் உள்ள மக்கள் அவரைப் பார்த்து ஏளனம் செய்து, சாலையை அடைத்தனர்.

இதனால் அவர் விழாவில் கலந்து கொள்ளாமல் மீண்டும் கொழும்பிற்குத் திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அத்தியாவசிய சேவைகளைத் தடைகளின்றி வழங்குவது குறித்து கிளிநொச்சியில் ஆய்வு

அசௌகரியங்களை தவித்துக்கொண்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை எந்தத் தடைகளும் இன்றி வழங்குவதற்கு ஏற்ற வகையில் அனைத்து திணைக்களங்களும் செயற்பட வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு வழங்கக்கூடிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் அசௌகரியங்களைத் தவித்துக்கொண்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை எந்தத் தடைகளும் இன்றி வழங்குவதற்கு ஏற்ற வகையில் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக எரிபொருள், சமையல் எரிவாயு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலே அதை சரியாக முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளித்து அதை செயல்படுத்த வேண்டும்.

அதாவது பாடசாலை பஸ் சேவை மற்றும் மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகவும் குறிப்பாக விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருளைக் கால தாமதமின்றி உரியவாறு வழங்குதல், உத்தியோகத்தர்கள் கடமைகளுக்குச் செல்லக்கூடிய வகையில் எரிபொருளை வழங்குதல், சுகாதாரத் திணைக்களத்துக்கான எரிபொருளை உரிய ஒழுங்குகளில் வழங்குமாறும், மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு எந்தத் தடைகளும் இன்றி செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் காணி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பல நோக்குக் கூட்டுறவு சங்க முகாமையாளர்கள் மற்றும் போக்குவரத்து துறையினர் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர்களின் கைதுக்கு முஸ்லிம் மீடியா போரம் கண்டனம்



(எம். எஸ்.எம்.ஸாகிர்)

மிரிஹானையில் கடந்த வியாழனன்று இரவு இடம்பெற்ற பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தின் போது செய்தி திரட்டுவதற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் சிலர் கைது செய்யப்பட்டமையும், தாக்கப்பட்டமை குறித்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமது கடமையை நிறைவேற்றுவதற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை மட்டுமன்றி, கைது செய்யப்பட்டிருக்கின்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஊடகக் கடமையை நிறைவேற்றச் சென்ற ஊடகவியலாளர்கள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்தும் தாக்கப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை நடாத்தி, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது இருப்பதை உறுதிப்படுத்துமாறும், குறிப்பாக ஊடக வியலாளர்கள் இவ்வாறான கட்டங்களில் தமது கடமைகளைச் செய்வதற்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸ் மா அதிபரையும், ஊடக அமைச்சரையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம். – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**23254 | வே | 1989**
கொழும்புத்துறை | M.Com
HR Manager & Director
உத்திரட்டாதி (மீனம்)
180 செ.மீ | இந்து | செவ்: 04

**23470 | வே | 1990**
பருத்தித்துறை | BSC
Quantity Surveyor | ஓமான்
கேட்டை (விருச்சிகம்)
152 செ.மீ | இந்து

**23110 | வே | 1990**
யாழ் நகரம் | B. Network Eng.
Software Engineer
ரோகிணி (ரிஷபம்) | சிங்கப்பூர்
168 செ.மீ | இந்து | செவ்: 02

**23155 | வே | 1990**
பருத்தித்துறை | இந்து | BSC
Software Engineer |
நியூசிலாந்து | அவிட்டம்
(மகரம்) | 182 செ.மீ | செவ்: 08

**23011 | வே | 1990**
காரைநகர் | MBA
Senior Accountant
பூரட்டாதி (கும்பம்)
177 செ.மீ | இந்து

**23464 | வே | 1990**
கந்தர்மடம் | MBBS
Doctor | UK | இந்து
அவிட்டம் (மகரம்)
182 செ.மீ | செவ் : 07

**22510 | வே | 1990**
நெல்லியடி | BBA, CIMA
Audit Manager | UAE
விசாகம் (விருச்சிகம்) | இந்து
170 செ.மீ

**23080 | வே | 1991**
சிறுப்பிட்டி | இந்து | BBA
Development Officer
அத்தம் (கன்னி)
176 செ.மீ

**22747 | வே | 1991**
சாவகச்சேரி | இந்து
BSC | Engineer
அவிட்டம் (மகரம்)
182 செ.மீ | சூ.செவ் : 07

**23008 | வே | 1991**
இணுவில் | இந்து
MBBS | Doctor
அத்தம் (கன்னி)
178 செ.மீ | சூ.செவ் : 02

**22462 | வே | 1992**
வளலை | B.C.E
Civil Engineer
திருவோணம் (மகரம்)
173 செ.மீ | இந்து

**22900 | வே | 1992**
யாழ் நகரம் | BSC, MA, PHD
Statistical Scientist | US
பூரட்டாதி (மீனம்) | இந்து
168 செ.மீ | செவ் : 02

**23233 | வே | 1992**
சித்தங்கேணி | BSC
Assistant Engineer
பூராடம் (தனுசு) | இந்து
178 செ.மீ | செவ் : 01

**22498 | வே | 1992**
காரைநகர் | இந்து | AAT
Assistant Accountant
திருவோணம் (மகரம்)
179 செ.மீ | செவ் : 08

**22666 | வே | 1992**
அல்வாய் | B. Engineering
Software Business Analyst
அத்தம் (கன்னி) | இந்து
165 செ.மீ | செவ் : 12

**23200 | வே | 1992**
மானிப்பாய் | இந்து | MSC
System Engineer | US
விசாகம் (துலாம்)
179 செ.மீ | செவ் : 04

**23239 | வே | 1992**
வட்டுக்கோட்டை | இந்து
BSC | SR. Software Engineer
சுவாதி (துலாம்)
178 செ.மீ | அவுஸ்த்ரேலியா

**22966 | வே | 1992**
சாவகச்சேரி | இந்து | Electrical
Engineering | Electrical
Engineer | திருவாதிரை
(மிதுனம்) | 186 செ.மீ | செவ்: 08

**22894 | வே | 1993**
கோண்டாவில் | இந்து | BSC
Software Engineer
மிருகசீரிடம் (மிதுனம்)
183 செ.மீ | செவ் : 02

**22972 | வே | 1993**
வண்ணார்பண்ணை | இந்து
BSC, MBA | Engineer
புனர்பூசம் (கடகம்)
165 செ.மீ

**23038 | வே | 1993**
யாழ் நகரம் | இந்து | BSC
Science Teacher
சுவாதி (துலாம்)
168 செ.மீ | செவ் : 04

**23260 | வே | 1993**
அளவெட்டி | இந்து | CIMA,
ACCA Part Qualified | Assistant
Accountant | கார்த்திகை
(ரிஷபம்) | 172 செ.மீ

**23197 | வே | 1994**
வேலணை | இந்து | BBA
Managing Director | ஜேர்மனி
உத்தராடம் (மகரம்)
179 செ.மீ | செவ்: 07

**23119 | வே | 1994**
வேலணை | இந்து | A/L
Pizza Business | பிரான்ஸ்
மூலம் தனுசு
177 செ.மீ

**23434 | வே | 1994**
உடுதுவுமுருஜ | இந்து
BSC, MD, PHD | Engineer
சித்திரை (கன்னி)
163 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23071 | வே | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ | சூ.செவ் : 05

**22681 | வே | 1989**
காரைநகர் | இந்து
BSC | Lecturer
ரேவதி (மீனம்)
154 செ.மீ

**23128 | வே | 1989**
அச்சுவேலி | இந்து | சைவம்
MSC | Lecturer
புனர்பூசம் (மிதுனம்)
160 செ.மீ | செவ் : 12

**23203 | கு | 1989**
காரைநகர் | இந்து | BA
Assistant Manager at Bank
சுவாதி (துலாம்)
160 செ.மீ

**22798 | வே | 1989**
புலோலி | இந்து
MBBS | Doctor
பரணி (மேடம்)
158 செ.மீ | சூ.செவ் : 09

**22795 | வே | 1990**
மண்கும்பான் | இந்து
BA | Development Officer
மூலம் (தனுசு)
176 செ.மீ

**22705 | வே | 1991**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
பரணி (மேடம்)
154 செ.மீ | செவ் : 02

**23353 | வே | 1992**
தெல்லிப்பளை | B. Siddha
Medicine | Doctor
சித்திரை (துலாம்) | இந்து
155 செ.மீ

**23458 | வே | 1992**
ஏளாலை | இந்து | BSC
Assistant Civil Engineer
பரணி (மேடம்)
164 செ.மீ

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து
BSC | Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
161 செ.மீ | செவ் : 02

**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
Higher Dip. in Software
Bank Assistant | மூலம்
(தனுசு) | 159 செ.மீ

**23491 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | B. Arts
Development Officer
திருவோணம் (மகரம்)
170 செ.மீ

**23248 | வே | 1994**
ஆவரங்கால் | இந்து
BBA, MBA, ACCA | Analyst
விசாகம் (துலாம்)
166 செ.மீ | சூ.செவ் : 09

**22927 | வே | 1994**
வரணி | இந்து | BA. in
English | English Teacher
அத்தம் (கன்னி)
163 செ.மீ | செவ் : 07

**22789 | வே | 1994**
கொக்குவில் | இந்து
BSC | Operation Analyst
பூசம் (கடகம்)
159 செ.மீ

**23326 | வே | 1994**
உரும்பிராய் | இந்து | BSC
Reading MSC | Lecturer
மூலம் (தனுசு)
163 செ.மீ

**22537 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSC
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**23206 | வே | 1995**
இணுவில் | இந்து | Diploma
in Civil Engineering |
Draughtsman | உத்தரம்
(கன்னி) | 157 செ.மீ

**22696 | வே | 1996**
சித்தங்கேணி | இந்து | BSC
Software Engineer
திருவோணம் (மகரம்)
176 செ.மீ | சூ.செவ் : 05

**23086 | வே | 1996**
சண்டிலிப்பாய் | இந்து | BBA,
ACCA | Lecturer
விசாகம் (துலாம்)
170 செ.மீ

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# RADIANT DAWN


A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 03rd of Apirl 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com



# Fiber optics

***Definition***

Fiber optics is the technology used to transmit information as pulses of light through strands of fiber made of glass or plastic over long distances.

Optical fibers are about the diameter of a strand of human hair and when bundled into a fiber-optic cable, they're capable of transmitting more data over longer distances and faster than other mediums. It is this technology that provides homes and businesses with fiber-optic internet, phone and TV services.

***Fiber-optic cables***

A fiber-optic cable contains anywhere from a few to hundreds of optical fibers within a plastic casing. Also known as optic cables or optical fiber cables, they transfer data signals in the form of light and travel hundreds of miles significantly faster than those used in traditional electrical cables. And because fiber-optic cables are non-metallic, they are not affected by electromagnetic interference (i.e. weather) that can reduce speed of transmission. Fiber cables are also safer as they do not carry a current and therefore cannot generate a spark.

***What is a fiber-optic network?***

There are several different types of fiber-optic networks but they all begin with optic cables running from the network hub to the curb near your home or straight to your home to provide a fiber-optic internet connection. The fastest type of fiber network is called Fiber to the Home (FTTH) or Fiber to the Premises (FTTP) because it's a 100% fiber-optic connection with optical fiber cables installed to terminals directly connected to houses, apartment buildings and businesses.

On the other hand, Fiber to the Curb (FTTC) is a partial fiber connection because the optical cables run to the curb near homes and businesses and copper cables carry the signals from the curb the rest of the way. Similarly, Fiber to the Building (FTTB) is when fiber cable goes to a point on a shared property and the other cabling provides the connection to offices or other spaces.

***Fiber-optic internet***

Fios -- the most awarded network for internet service satisfaction over the past 10 years.

Now that you know how fiber optics work, let's talk about the many benefits of fiber-optic speed.

When you're on a FTTH network, you'll experience significantly faster upload and download speeds, more bandwidth for multiple devices at home and a reliable connection. And that's exactly what you'll get with Verizon Fios, the 100% fiber-optic network.

With Fios Gigabit Connection speeds up to a blistering 940/880 Mbps Speeds up to 940 Mbps download and 880 Mbps upload available in select areas., you'll enjoy HD streaming, gaming, video conferencing and so much more on up 100 devices at a time –virtually lag-free. No wonder Fios has been rated #1 by industry leaders time and again. Shop for Verizon Fios and see if fiber internet is available in your area.

# Importance of a Thermometer

Thermometers are everywhere and many people don't realize how often they use a thermometer. You may see one on a bank sign, on the oven, at the doctor's office when you are sick or inside your vehicle. Either way, thermometers are all around you and they all measure the same thing; the temperature.

***What You Need To Know***

Thermometers are an important part of weather forecasting

What you need to make your own thermometer

***More Project Weather School***

The temperature is a common term used in daily conversation. To put it simply, the temperature is a measure of how hot or cold something is. The temperature of an object is usually associated with some sort of scale, such as Fahrenheit ($^0$F), Celsius ($^0$C) or Kelvin (K). The Fahrenheit scale is the most commonly used scale in the United States.

Thermometers are used to measure the temperature and this is a very important part of weather forecasting. Many thermometers come in a glass tube that contains a liquid, usually mercury or alcohol. The liquid expands when it's hotter and contracts when it is colder.

As the temperature changes, the liquid inside the thermometer will either rise or shrink. When the liquid inside the thermometer rises, the temperature has gone up. The temperature can be read from the scale on the side of the thermometer.

Knowing the air temperature is very important. It is an important part of weather forecasting. This is especially important during the winter months in Florida because temperatures that dip below freezing (32$^0$F or 0$^0$C) can damage crops. Temperature also controls what people wear year round.

***Experiment: Creating a Thermometer***

Purpose: Build a weather instrument that can measure the temperature

What you need:

- A clear glass bottle
- A straw



- Red food coloring
- Water
- Measuring cup (something to pour water)
- Rubbing alcohol
- Modeling Clay

***Procedure:***

1. Fill the clear glass bottle with one cup of water
2. Pour a cup of rubbing alcohol inside the glass bottle
3. Place a few drops of red food coloring inside the bottle
4. Mix the solution together inside the glass bottle
5. Insert the straw but make sure the straw doesn't touch the bottom of the glass bottle
6. Use the modeling clay and place it around the top of the bottle to hold the straw in place.
7. Now you have made your thermometer! Let's test it out!
8. You can use a hair dryer to warm up the liquid inside the bottle or an ice pack to cool the liquid inside the bottle
9. Observe findings

***Results:*** A functioning thermometer that can measure whether the temperature has warmed or cooled. When it is warmer, the liquid inside the straw rises and the opposite happens when it cools.

***Conclusion:*** The thermometer is an easy yet important tool that can be used to detect changes in the temperature.

**The mills of God grind slowly but surely - Hungarian Proverb**

# Jaffna ICBT Campus Relocated




## 273, Navalar Road, Jaffna

**The Chief Executive Officer and Executive Dean of ICBT Campus Dr.Sampath Kannangara has ceremonially opened its re-located Jaffna Campus premises on last Wednesday (30th of March, 2022).**

**ICBT Jaffna Campus currently operates at 273, Navalar Road, Jaffna with more facilities, refurbished lecture halls, increased campus space and upgraded computer labs.**

**The following Members of the senior management of ICBT Campus were also present at the Ceremonial Opening of ICBT Jaffna Campus (re-location).**

**Mr. Anura Gamage - Director Marketing,**
**Mr. Vijith Liyanage - Director Operations,**
**Mr. Sampath Perera - General Manager,**
**Mr. Chandru Chandrasekaran - Chief Academic Officer,**
**Ms. Uthpala Hansani - Chief Finance Officer**
















*The event was also graced by the participation of the foll owing Distinguished Guests.*

Rev. Antonio Danistus - St. Patrick's College, Jaffna.
Dr. Gobyshanger - Consultant Orthopaedic Surgeon, Teaching Hospital, Jaffna.
Dr. Sritharan - Consultant Surgical Oncologist, Teaching Hospital, Jaffna.
Mr. Kumaran - Physics Teacher, Science World.
Mr. Paval - British Council, Jaffna
Mr. Kandeepan - Registrar, University of Jaffna.
Mr. Gnanasampanthan - Principal, Kokuvil Hindu College.
Mr. Nishanthan - Regional Manager, HNB.
Mr. Rohan - Zonal Manager, NTB.
Mr. Yathuraj - General Manager, Kalaikkathir.
Mr. Thavaruban - Managing Director, Speed IT.
Mr. Anojan - General Manager, Mode Engineering.
Mr. Royz - Area Sales Manager, Nippon.
Mr. Balaruban - Manager, Alliance.



**READ THE FOLLOWING TEXT VERY CAREFULLY**

# The Story of BASKETBALL




Did you know that the game of basketball was the result of a challenge from a teacher to his students to stimulate the interest of an ill-behaved class during the boring winter months? Well, here's the full story.

Basketball started in 1891 in Springfield, Massachusetts. James Naismith, a Physical Education teacher, was asked to invent a new sport. The sport was supposed to be played indoors during the winter when it was cold outside. The many football and rugby players who played their sport in autumn and spring had nothing to keep them fit 10 during the winter season. That's when he invented basketball The first garne was played in December 1891. They used a soccer ball for the basketball because it was just the right size they were looking for. The first baskets were empty peach baskets! He hung them 3 15 meters above the floor in the gymnasium After the first game Naismith wrote the 13 rules of the game and published them in the school newspaper. The sport immediately became popular.

Soon after that, high school and college teams were 20 playing basketball Today there are very famous professional teams throughout the USA and all around the world. You have certainly heard of fantastic teams as the New York Knicks or Chicago Bulls. You have probably seen great basketball players as well, like Magic Johnson or Michael Jordan No matter who is playing, basketball is one of the most popular games in 25 the world Millions of people like watching this fast and very intense garne.

A. Find out in the 2nd paragraph the words that mean the opposite of the following
1. ended
2. old
3. hot
4. everything

B. Choose the correct answers.

1. Naismith wanted to keep his class busy...
a) during autumn
b) during winter
c) during spring.

2. James Naismith wrote ...
a) thirty basketball rules
b) three basketball rules
c) thirteen basketball rules.

## Normal Present Perfect Examples
## Present Perfect Passive Voice Voice

| | |
|---|---|
| 1 - I **have written** a letter | A letter **has been written** by me |
| 2 - He **has cooked** Food | Food **has been cooked** by me |
| 3 - They **have played** football | Football **has been played** by them |
| 4 - She **has made** cake | Cake **has been made** by her |
| 5 - He **has learnt** English | English **has been learnt** |
| 6 - They **have started** Generator | Generator **has been started** by them |
| 7 - She **has made** changes | Changes **have been made** by her |
| 8 - I **have repaired** L.C.D | L.C.D **has been repaired** by me |
| 9 - I **have made** Tutorials | Tutorials **have been made** by me |
| 10 - They **have implemented** rules | Rules **have been implemented** by them |
| 11 - We **have taken** medicine | Medicine **has been taken** by us |
| 12 - She **has understood** World | World **has been understood** by her |
| 13 - We **have built** buildings | Buildings **have been built** by us |
| 14 - He **has cooked** french fries | french fries **have been cooked** |
| 15 - We **have selected** players | Players **have been selected** |
| 16 - We **painted** homes | Homes **have been painted** by us |
| 17 - They **have fought** with enemies | Enemies **have been fought** by them |
| 18 - She **has called** them | They **have been called** by her |
| 19 - She **has used** make-up | Make Up **has been used** |
| 20 - He **has cleaned** the Room | The Room **has been cleaned** by him |

## Passive in English Sentences in the Present Perfect. Exercises

01. They ***have opened*** a new shop.
..........................................................
02. Rick ***has interviewed*** the lady.
..........................................................
03. I ***have bought*** the tickets.
..........................................................
04. We ***have not sold*** the bike.
..........................................................
05. Tim ***has forgotten*** the sandwiches.
..........................................................
06. He ***has not cleaned*** the kitchen yet.
..........................................................
07. Joe and Gerry ***have never played*** rugby.
..........................................................
08. Somebody ***has stolen*** Peter's car.
..........................................................
09. She ***has not used*** the tablet for days.
..........................................................
10. ***Have*** they ***found*** the keys?
..........................................................

# Passive: Inventors and Inventions



## A good or a bad invention?

Our lives (1) .......................(make) better every day thanks to inventions. But sometimes, inventions can make our lives worse. This can happen when an invention (2) .......................... (not use) according to the inventor's plan. For example, Alfred Nobel, a Swedish scientist, invented a strong explosive in 1867. It (3) ............................ (call) dynamite and it revolutionized the world of engineering. After its invention, many bridges, tunnels and other structures (4) ............................ (build) with the help of dynamite. However, dynamite(5) ................................. (also, use) to kill people in wars. This upset Nobel. Before his death, Nobel decided to use the money from his famous invention to make the world a better place. A special fund (6) ..................................... (start) in Nobel's name. Every year, Nobel prizes (7) .................................(give) for extraordinary work in science, medicine, literature and the promotion of world peace.

## Where is the rice grown?

People usually think that rice (1) ..................................... (grow) in China But did you know that there's a place in Spain full of rice fields? They (2) ........................................_(locate) in north-eastern Spain on the banks of the Ebro Delta at the Riet Vell nature reserve. 300 tonnes of rice (3) ................................. (produce) each year. The first rice (4) .................................. (plant) here in 2003. Chemicals(5).................................... (not use) in the fields before 2003 so the rice is organic. Lots of birds (6) ....................................... (help) by the rice fields, including herons and flamingos. The (7).......................... (buy) by many countries, including Germany. In 2004 the rice (8) ........................ (give) an organic food award.



**குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்**

# சிறுவர் கதிர்





## காளையின் அறிவுரை

ஒரு விவசாயிக்கு விசுவாசமான காளைமாடு ஒன்று இருந்தது. அது எல்லா விதத்திலும் அவருக்கு உதவியாய் இருந்தது. ஒரு நாள் அதன் பக்கத்தில் கொசு ஒன்று வந்து. அந்த கொசு காளையிடம் சொல்லிச்சாம், நீ தினமும் அந்த விவசாயிக்கு நிறைய உதவி செய்கிறாய், நீ தினமும் அந்த விவசாயியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கூட்டிட்டு போகிறாய். அதுக்கு பதில் உனக்கு என்ன தான் கிடைக்கிறது வெறும் புல் மட்டும்தான் சாப்பிடக் கொடுக்கிறார்கள்.

அதுக்கு அந்த காளைமாடு சொல்லிச்சாம், இங்க பாரு நண்பா அதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்ல. மனிதர்களுக்கு உதவி செய்வது எனக்கு ரொம்பவே பிடிக்கும், அவங்க என்ன ரொம்பவே நல்லா பார்த்துக்குறாங்க. அதுக்கு அந்த கொசு சொல்லிச்சாம், இந்த மனிதர்கள் அவர்களோட தேவைக்காக தான் உன்னை பயன்படுத்துகிறாங்க அதனால தான் நான் இந்த மனிதர்களுக்கு உதவி பண்றது இல்லை.

அதுக்கு பதில் அவர்களோட ரத்தத்தை நான் உறிஞ்சி எடுத்து விடுவேன், ஆனால் நீ ரொம்ப பெரிய உருவமாக இருந்தும், இந்த மனிதர்களுக்கு நீ அடிமையாய் இருக்கிறாய். ஆனால் என்னைப் பார் நான் ரொம்ப சின்னதா இருக்கிறேன் ஆனாலும் அவர்களுடைய ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு இருக்கிறேன்.

அதற்கு அந்த காளை மாடு சொல்ல்லிச்சாம், நான் மனிதர்களுக்கு ஏன் உதவி செய்வேன் தெரியுமா, அவங்க எனக்கு சாப்பாடு கொடுக்குறாங்க, தங்க இடம் கொடுத்து இருக்காங்க, உடம்பு சரி இல்லை என்றால் நன்றாக கவனிக்கிறார்கள், நான் வேலை செய்தால் பாசத்தோட தட்டிக் கொடுக்கிறார்கள். அதனால் தான் நான் அவங்களுக்கு ரொம்ப விசுவாசமா இருக்கிறேன் என்றது.

அதற்கு கொசு சொல்லிச்சாம் ஆனா நீ செய்கிற வேலைக்கு இது ரொம்ப குறை வாக தெரியலையா? நீ ராத்திரியும் பகலும் வேலை செய்தால் உனக்கு அன்பு மட்டும்தான் கொடுக்குறாங்க. ஆனால் நான் உன்னை விட ரொம்பவும் பரவாயில்லை, பார்க்க ரொம்ப குட்டியா இருந்தாலும் ஒருநாளும் அவர்களுக்கு நான் அடிமையாக இருந்ததில்லை என்றது கொசு.

அதற்கு காளை மாடு சொல்லிச்சாம், நீ ரொம்பவே முட்டாளா இருக்கிறாய், இதுக்கெல்லாம் நீ பெருமை படவே கூடாது. மனுர்களுக்கு ஏன் உன்னை பிடிக்கலை என்றால் நீ அவங்களின் ரத்தத்தை உறிஞ்சுவதனால், அவர்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை நீ ஒரு பூச்சியாக மட்டும்தான் அவர்களுக்கு தெரிகிறாய் என்றது.

அதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்றது கொசு. மாடு சொன்னதை கேட்காமல் அந்த கொசு அங்கிருந்து பறந்து போனது. எப்பவும் போல ஒரு நாள் அந்த விவசாயி மேல் போய் உட்கார்ந்த கொசு அவரோட ரத்தத்தை உறிஞ்ச தொடங்கியது. விவசாயி அந்த கொசுவை ஒரே அடி அடித்து விட்டார், அதுவும் செத்துப் போச்சு. கெட்டது செய்தால் கெட்டதே விளையும்.

**நீதி : எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய நேரிடும்.**

## கிக்கீக் கிளியக்கா....!

**கிக்கிக்கீ......கிளியக்கா - நீ
கிட்ட வந்து கதை பேசு**

**வளைந்த சொண்டுக் காரியம்மா
வட்ட ஆரம் போட்ட அம்மா
குண்டு மணிபோல் கண்ணழகி - நீ
கொஞ்சம் அருகே வந்தாலென்ன.
( கிக்கிக்கீ.......)**

**பச்சை மிளகாய் பழந்தாறேன்
பழுத்த கொவ்வைக் கனிதாறேன்
இச்சை யோடு நீ தின்ன
எதைக்கேட்டாலும் நான் தருவேன்
( கிக்கிக்கீ......)**

**தென்னை மரத்துக் கீற்றினிலே
ஊஞ்சல் ஆடும் கிளியக்கா
உன்னைப் போல குதூகலமாய்
வாழ எனக்கும் ஆசையக்கா
( கிக்கிக்கீ.....)**

**கூட்டத்தோடு சுதந்திரமாய்
கூடிப் பறக்கும் கிளியக்கா
எனக்கும் இறக்கை இருந்திருந்தால்
இணைந்து உன்னுடன் நான்பறப்பேன்.
( கிக்கிக்கீ......)**

**- ஷெல்லிதாசன் -**

## விடுகதைகளும் விடைகளும்

1) கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான் அது என்ன? வெங்காயம்
2) எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள் அவள் யார்? தொலைபேசி
3) இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன? பட்டாசு
4) பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள் அது என்ன? வெண்டைக்காய்
5) உடல் சிவப்பு வாய் அகலம் உணவு காகிதம் நான் யார்? அஞ்சல் பெட்டி
6) அடி மலர்ந்து நுனி மலராத பூ எது? வாழைப்பூ
7) காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன? பேனா
8) தாடிக்காரன் மீசைக்காரன் கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன? தேங்காய்
9) சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன? காய்ந்த மிளகாய்
10) ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன? விரல்கள்



## சிறுவர்

சிறுவர் நாம் கூடி மகிழ்ந்திட
இனிய நாள் இதுவென்றோ
ஆடல் பாடல் கொண்டாட்டம்
இந்நாள் நமக்கு கொண்டாட்டம்.
சிறுவர் நாம் மகிழ்ந்திட
தந்தார் பாரதி பாப்பா பாட்டதனை
கூடி நாமும் பாடிடுவோம்
கோடி குதூகலம் பெற்றிடுவோம்
சிறுவர் தினம் இதுவன்றோ
சீற்றம் தன்னை கலைத்திடுவோம்
உவகையுடன் எனமயினறு
பெரியோர்கள் வாழ்த்துவர்
அதனைக் கேட்டு நாம் இன்று
பேரானந்தம் கொண்டாடுவோம்
மனித வாழ்வே ஆனந்தம்
சிறுவயதோ பேரானந்தம்



## பழமொழிகள்

**1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.**
**2) அச்சாணி இல்லாத தேர் முச்சானும் ஓடாது.**
**3) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
**4) குரைக்கிற நாய் கடியாது.**
**5) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
**6) பலதும் கற்கப் பண்டிதன் ஆவான்.**
**7) அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே.**
**8) தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.**
**9) ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.**
**10) அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்.**

# தமிழர்கள் மறந்த பனை மரம்!



அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழர்களின் பாரம்பரிய மரங்களில் ஒன்றுதான் பனை மரம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி என நாம் பெருமைப் பட்டுக்கொள்வதற்கான முக்கிய சாட்சியாக விளங்குவது பனை ஓலைச் சுவடிகளிலிருந்து கிடைத்த வரலாற்றுத் தகவல்கள்தான். பனை மரம் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தது என்பதனை தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், தேவாரம், திவ்யபிரபந்தங்கள் உட்பட பல சங்க இலக்கியங்களிலும் காணக்கிடைக்கிறது. பனை ஓலைகளில் எழுதப்பட்டதால்தான் இந்த இலக்கியங்களும், தமிழ் எழுத்துக்களும் அழியாமல் தப்பிப்பிழைத்தன எனக்கூறினாலும் தகும். ஓலைச்சுவடிகள் செய்ய பனை மர ஓலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தமிழகத்தில், குறிப்பாக மூன்று வகை பனை மரங்களான, தாளைப்பனை, கூந்தல் பனை, இலாந்தர் பனை போன்ற மரங்களின் ஓலைகளையே 'ஓலைச்சுவடிகள்' செய்ய பயன்படுத்தியுள்ளனர் என வரலாறு கூறுகின்றது. உலக நாகரீகங்களில், எழுதுவதற்காக ஆமை ஓடுகள் மற்றும் பல்வேறு விலங்குகளின் தோள்கள் பயன்படுத்தப்பட்டபோதிலும் தமிழர்கள்தான் இதனை எளிமைப்படுத்தி பனைஓலைகளில் எழுதத்தொடங்கினர். அச்சுக் கருவி கண்டுபிடிக்கப்படும்வரையில் இந்தமுறை தொடர்ந்ததென்றால் மிகையில்லை. திருக்குறளில் பயன் மரம், என குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மரங்களில் பனை மரமும் ஒன்று.

கிணற்றைச் சுற்றி பத்து பனைமரம் நின்றால் இறுதிவரை அந்த கிணறு வற்றவே வற்றாது . அப்படி வற்றவிடாத அந்த பனைமரம் கழுத்து முறிந்து சாகிறது என்றால் அந்த நிலம் பாலைவனமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை புரிந்துகொள் என்பது நம்மாழ்வார் கூற்று . ஒரு சமூகத்தில் பயன்படுத்தப்படும் பொருள்களை வைத்து அச்சமூகத்தை கணிப்பது புழங்குபொருள் பண்பாடு எனப்படும். அந்தவகையில் தாலி முதல் பல்வேறு அன்றாடத் தேவைக்குரிய உணவு பொருள்கள்வரை பனையின் பயன்பாடு தொன்றுதொட்டு தமிழர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டது. (பனை ஓலையிலிருந்து செய்யப்பட்ட தாலி, தாலிப் பனை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது இலக்கியங்களில்) பனை மரத்தினை தலவிருட்சமாக கொண்ட பல கோவில்கள் தமிழகத்தில் உள்ளன.

தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கையிலும் பனையின் பெயரை அடிப்படையாகக்கொண்டு பல ஊர்களின் பெயர்கள் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒற்றை பனைமரம் எண்ணூறுக்கும் மேற்பட்ட மருத்துவ பயன்களைக்கொண்டது என விளக்குகிறது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கத்தாத்தா என அழைக்கப்படும் சோம சுந்தரப்புலவர் எழுதிய தாலவிலாசம் எனும் இலக்கியம்.

## கல்விக்கதிர்

- அகரன் -

மனிதர்கள் மட்டுமன்றி வெளவால், புணுகுப்பூனை, மரநாய், நாகணவாய், மைனா, தூக்கணாங்குருவி போன்ற உயிரினங்களும்கூட பனை மரத்தினை சார்ந்து வாழக்கூடியவை. அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் பனை மரத்தின் அழிவு என்பது இந்த உயிரினங்களின் அழிவாகவும் பார்க்கப்படவேண்டியவொன்று. ஒருகாலத்தில் ஐந்துவகை நிலங்களிலும் நிலத்திற்கு ஏற்றவாறு மக்கள் வாழ்ந்துவந்தனர். கடலும் கடல்சார்ந்த பிரதேசங்களிலும் வாழ்ந்துவந்த நெய்தல் நில மக்கள் தற்போது வாழ்வாதார மாற்றத்தினால் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட , தற்போதெல்லாம் கடற்கரை என்பது பெரிய பெரிய பங்களாக்கள், சொகுசு தொடர்மாடிகள் போன்றவற்றை அமைத்துக் கொண்டு பணக்காரர்கள் வசிக்கக்கூடிய இடமாகவும், சுற்றுலாவிற்கான இடமாகவும், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைக் கொண்ட இடமாகவும் மாறிவிட்டதென்றால் மிகையில்லை.

இந்த மாற்றமென்பதும் பனையின் அழிவிற்கு ஓர் காரணம், ஏனெனில் தற்போதெல்லாம் கடற்கரைகளை அழகுபடுத்த அயல் தாவரங்களானா பாம் ட்ரீக்களே அதிகம் விரும்பப்படுகின்றன. இதனால் காலங்காலமாக நம் கடற்கரைகளை தன்னுடைய சல்லி வேர்களால் பாதுகாத்து மண்ணரிப்பு, கடல்கோள் போன்றவற்றை தடுத்து நிறுத்திய பனை மரங்கள் வேண்டப்படாத ஒன்றாகிப்போய் விட்டன.

உண்மையில், ஆங்கிலேயரின் வருகையுடனேயே பனையின் அழிவும் ஆரம்பித்து விட்டன என்றுதான் கூறவேண்டும். சங்க காலம் தொட்டு தமிழர்களின் இனிப்புச் சுவை என்கிறவொன்றிற்கு பயன்பட்டது கருப்பங்கட்டி எனப்படும் பனங்கருப்பட்டியே. வெள்ளை சர்க்கரை என்கிற உணவு ஆங்கிலேயரால் நம் சமூகத்தினுள் புகுத்தப்பட பனங்கருப்பட்டியின் பாவனை மெல்லமெல்ல அழித்தொழிக்கப்பட்டது. ஆனால், இன்றும் பல மேலைத்தேய நாடுகளில் பனங்கருப்பட்டி, பனங்கல்கண்டு போன்றவற்றையே தமது உணவுப்பட்டியலில் வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது . எப்படி மிளகாயை நம்மிடம் தள்ளிவிட்டுவிட்டு ஆரோக்கியம் நிறைந்த மிளகை அபகரித்துக்கொண்டார்களோ அப்படித்தான் இதுவும்.

கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்த பனைமரங்களை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் தற்போது நம்மிடம் உள்ளது . முன்பெல்லாம், பாய், விசிறி, பெட்டிகள், தூரிகைகள், பல அலங்காரப்பொருள்கள் போன்றவை இந்த பனைமரத்திலிருந்து உருவாக்கப்பட்டன. இது கிராமப்புறத்தில் உள்ள பலருக்கும் ஓர் வாழ்வாதாரமாகவும் இருந்தது. ஆனால், இப்போதெல்லாம் நிலைமை தலைகீழ். பனைக்கென்று எந்த ஆராய்ச்சிநிலையமோ, அல்லது ஊக்குவிப்புகளோ இல்லை என்பது வருந்தத்தக்கது. சுமார் நூறு அடிகளுக்கு மேல் வளர்ந்துள்ள பனையில் ஏறுவதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

இந்த தொழில் நவீனமயப்படுத்தப்படாமல் இன்னும் பாரம்பரிய முறையில் நகர்ந்துகொண்டிருப்பதும் பனைப்பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகவும் அமைகிறது. உலகில் நூற்றி எட்டு நாடுகளில் பனை மரங்களும் அது சார்ந்த தொழிலும் முன்னிலை வகித்தாலும் தமிழகத்திலும், இலங்கையிலும் பனைத் தொழில், குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு மாத்திரமே உரித்தானது, இழிவானது என்கிற ஓர் எண்ணமும் நம் சமூகத்தில் இருப்பதால், அந்த தொழிலை செய்யும் பலரும் தமக்குப்பின் இந்த தொழிலை தம்முடைய வாரிசுகள் செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர் . இதுவும் பனையின் வீழ்ச்சிக்கான காரணம். பனைமரம் என்பது நட்டதும் உடனடியாக பலன் தரக்கூடியது மல்ல, அதற்கு குறைந்தது இருபது தொடக்கம் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டும், ஆகவே இன்றைய தலைமுறையில் நட்டதும் குறைந்தது ஆறுமாதங்களில் பலன் தந்து விடவேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் பனையின் வளர்ச்சியில் மக்கள் ஈடுபாடு காட்டாமைக்கு ஓர் காரணம் எனலாம்.

பூலோகத்தின் 'கற்பகத்தரு' எனப்படும் பனைமரம் முழுமையாக வளர இருபது ஆண்டுகாலம் தேவைப்படும், பதினைந்து ஆண்டுகளுக்குப்பின்னரே ஒரு பனை ஆண் பனையா? பெண் பனையா என்பதை தெரிந்துகொள்ள முடியும். பெண் பனையினை, பருவப் பனை என்றும் ஆண் பனையினை, அழுகுப் பனை, என்று குறிப்பிடுகின்றனர். சுமார் நூற்றி இருபது அடிவரை வளரக்கூடிய இம்மரங்களின் நுனி முதல் அடிவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலன்களைத் தரக்கூடியது.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்' என்பது திருக்குறள், ஆனால் நமக்கெல்லாம் நம் மொழியைக் கட்டிக்காத்து அருளிய பனை மரத்தினை காக்க மறந்து நன்றி மறந்த இனமாக மாறிவிட்டோமா தமிழர்களாகிய நாம்?

## மெய்யெழுத்துக்களின் வகைகள்

மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும் அவையாவன :–

1.வல்லினம்
2.மெல்லினம்
3.இடையினம்

வல்லினம் :– வன்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே வல்லினம் ஆகும்.
வல்லினம் :– க் , ச், ட், த், ப், ற்
சொற்கள் :– சக்கரம், பச்சை , மட்கை, மத்தளம், கப்பல், சுற்றம்

மெல்லினம் :– மென்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே மெல்லினம் ஆகும்.
மெல்லினம் :– ங் ,ஞ், ண், ந், ம், ன்
சொற்கள் :– சங்கு, மஞ்சள், நண்டு, சந்தை, மாம்பழம், பன்னீர்

இடையினம்:– வன்மைக்கும், மென்மைக்கும் இடையில் ஒலிக்கும் எழுத்துக்களே இடையினம் ஆகும்.
இடையினம் :– ய், ர், ல், வ், ழ், ள்
சொற்கள் :– பாய், தேர், பல்லி, செவ்வாழை, தாழ்வாரம், பள்ளம்

## இலங்கையின் பிரதான ஆறுகளும் அவற்றின் நீளங்களும்

| | |
|---|---|
| மகாவலி ஆறு :- 335 km | மகா ஓயா :- 134 km |
| அருவி ஆறு :- 148 km | களு ஆறு :- 129 km |
| கலா ஓயா :- 164 km | கிரந்தி ஆறு:- 117 km |
| களனி ஆறு :- 145 km | கும்புக்கன் ஆறு :- 116 km |
| யான் ஆறு :- 142 km | மாணிக்க ஆறு :- 114 km |
| தெதுறு ஓயா :- 142 km | ஜின் ஆறு :- 113 km |
| வளவை ஆறு :- 138 km | மீ ஆறு :- 109 km |
| மாதுறு ஓயா :- 135 km | கல் ஓயா :- 108 km |

# மருத்துவக் கதிர்



# தைரொய்ட்கான உணவு முறையும் வாழ்க்கை முறையும்



தைரொய்ட் சுரப்பி ஆனது ட்ரையோடோதைரோனின் (T3), தைராக்ஸின் (T4) எனும் 2 ஓமோன்களைச் சுரக்கிறது. இது மூளையின் ஹைபோத லமஸிலுள்ள பிட்டூட்ரி சுரப்பியி னால் ஒழுங்கமைக்கப்படுகின்றது. தைரொய்ட்டு சுரப்பியானது நாம் உண்ணும் உணவுகள் மற்றும் குடிக்கும் பானங்களை சமிபாடடையச் செய்ய (Metabolism) உதவுகின்றது. தைரொய்ட்டு சுரப்பி அதிகளவில் சுரப்ப தால் ஹைப்பர் தைராய்டிசமும் தைரொய்ட்டு சுரப்பி குறைந்தளவில் சுரப்பதால் ஹைப்போ தைராய்டிசமும் ஏற்படுகின்றது. மிகக் குறைந்த வீதமானவர்களுக்கே ஹைப்பர் தைராய்டிசம் ஏற்படுகின்றது. பெரும்பாலானவர்களுக்கு ஹைப்போ தைராய்டிசமே ஏற்படுகின்றது.

ஹைப்போ தைராய்டிசத்தினால் இதயத் துடிப்பு குறைவாகக் காணப்படல், உடல் எடை அதிகரித்தல், அதிக தூக்கம், அசதியாகக் காணப்படுதல், சாதாரண குளிரைக் கூடத் தாங்க முடியாத நிலை, தோல், சருமம் ஆகியவை அதிக வறட்சியாகக் காணப்படுதல், நகங்கள் மெல்லியதாக அல்லது எளிதில் உடையக் கூடியதாகக் காணப்படுதல், முடி உதிர்வு ஏற்படல், புருவ உரோமங்கள் உதிர்தல், மலச்சிக்கல் ஏற்படல், ஒருமுகப்படுத்தி சிந்திக்கும் ஆற்றல் (Concentration) குறைவடைதல், மாதவிடாயின் போது அதிக வயிற்று வலி, அதிக குருதி வெளியேற்றம் காணப்படுதல், கொலெஸ்ட்ரோல் அதிகமாகக் காணப்படல் போன்றன ஏற்படும்.

ஹைப்பர் தைராய்டிசத்தினால் இதயத் துடிப்பு அதிகமாக் காணப்படல், அதிகளவில் வியர்வை வெளியேற்றம் காணப்படல், கை , கால் நடுக்கம் ஏற்படல், உடல் எடை குறைதல், அதிகரித்த அளவில் முடி உதிர்வு ஏற்படல், சாப்பிட்டவுடன் மலம் கழித்தல், வயிறுபோக்கு, தோல் மென்மையாகக் காணப்படுதல், தோலில் சிவப்புத் தழும்புகள் (யூழிவிஜுளவி) காணப்படுதல், தோலில் எரிச்சல் உணர்வு ஏற்படல், மாதவிடாயின் போது குறைவான குருதி வெளியேற்றம் காணப்படுதல், மாதவிடாய் ஏற்படும் நாள்கள் குறைவாகக் காணப்படுதல், கொலஸ்ட்ரோல் குறைவாகக் காணப்படுதல், விழி பிதுங்கிய நிலை போன்றன ஏற்படும்.

கர்ப்ப காலங்களில் ஏற்படும் தைரொய்ட் குறைபாடுகள் குழந்தையின் மூளை வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியது. எனவே தைரொய்ட் குறைபாடுகள் உள்ளவர்கள் கர்ப்ப காலங்களில் வைத்திய ஆலோசனையைப் பெற்று அதற்குரிய சிகிச்சைகளைப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியமாகும்.

தைரொய்ட் சுரப்பியின் சீரான தொழிற்பாட்டிற்கு உணவுமுறைகள் மற்றும் தினசரி வாழ்க்கை முறையில் அதிக கவனம் தேவை. தைரொய்ட் சுரப்பியின் சீரான தொழிற்பாட்டிற்கு அயடீன் அவசியமாகும். கல் உப்பை அல்லது இந்து உப்பை (Rock salt ) உணவில் சேர்க்க வேண்டும். இந்து உப்பில் இயற்கையாகவே அயடீன் உண்டு. நல்லெண்ணை, உப்புத் தண்ணீர் என்பவற்றால் வாயை கொப்பளித்து (Gargling) வருதல் தைரொய்ட் சுரப்பை ஒழுங்கமைக்கும்.

நீத்துப்பூசணிக்காய், வெள்ளரிக்காய், சுரைக்காய் போன்ற நீர்ச்சத்து அதிகளவில் உள்ள காய்கறிகளை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நீத்துப்பூசணிக்காயில் காணப்படும் வித்துக்களை நீக்கிவிட்டு அதனை ஒரு கைப்பிடி கொத்தமல்லி இலைகளுடன் சேர்த்து அரைத்து சாறு எடுத்து காலையில் வெறும் வயிற்றில் குடிக்கலாம். இச்சாறு குடித்து அரை மணி நேரத்திற்குள் வேறு எதனையும் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இதனை 2 மாதங்கள் தொடர்ந்து குடித்துவர தைரொய்ட் சுரப்பு ஒழுங்கமைக்கப்படும்.

மல்லியை இரவில் ஒரு டம்ளர் நீரில் ஊறவைத்து காலையில் அதனை அரை டம்ளர் ஆகும் வரை கொதிக்கச் செய்து வடிகட்டி குடித்து வரலாம். தேங்காய் எண்ணெய், தேங்காய், நல்லெண்ணெய், தினை,பச்சை இலை வகைகள், சிவப்பு அரிசிச் சோறு, கொழுப்பு நீக்கப்பட்ட பாற் பொருள்கள், புதினா, சிறு தானியங்கள், கருப்பட்டி, கடல் உணவுகள், முட்டை ஆகியவற்றையும் தொடர்ச்சியாக உணவில் சேர்த்து வரவேண்டும். காலையில் சூரிய வெளிச்சத்தில் நிற்பது, வாரத்தில் இரண்டு முறையாவது நல்லெண்ணெய்க் குளியல் மேற்கொள்வது ஆகியவையும் தைரொய்டுக்கான தீர்வினை வழங்கும்.

இத்துடன் தினமும் நடைப்பயிற்சி, யோகா, உடற்பயிற்சிகள் மூச்சுப்பயிற்சி ஆகியனவும் மிக முக்கியமாக பிராணாயாமம் செய்து வர தைரொய்ட் குணமாகும். சாதாரண நிலையில் அமர்ந்து இருந்து மூச்சை மெதுவாக உள்ளே இழுத்து தலையை 90 பாகை கீழ்ப் பக்கமாகச் சரித்து மூச்சை சிறிது நேரம் உள்ளேயே நிறுத்தி வைக்க வேண்டும். பின்னர் தலையை மேலுயர்த்தும் போது மெதுவாக மூச்சை வெளிவிட வேண்டும். இந்த மூச்சுப் பயிற்சியை 15 – 20 தடவைகள் தினமும் செய்து வரலாம். அத்துடன் முன்னோக்கி வளைந்து செய்யப்படும் யோகாசனப் பயிற்சிகள் தைரொய்ட் சுரப்பியின் ஒழுங்காகத்தைப் பேண உதவும். விபரீதகரணி ஆசனமும் தொடர்ந்து செய்து வரலாம். கடற்கரைகளில் நடைப்பயிற்சி மேற்கொள்வது கூடுதலான பயனை வழங்கும்.

பூக்கோவா , கோவா, சோயா ஆகியவை அயடீன் உடலில் அகத்துறிஞ்சப்படுதலைத் தடுக்கக்கூடியது. ஹைப்போ தைராய்டிசமுள்ளவர்கள் இவற்றை உணவில் மிகக் குறைந்த அளவிலேயே சேர்க்க வேண்டும். இவற்றை உணவில் சேர்க்க முன்னர் நன்றாக வேகவைத்துப் பயன்படுத்த வேண்டும். க்ளுட்டன் அதிகமாகவுள்ள கோதுமை, பார்லி ஆகியவற்றில் செய்யப்பட்ட உணவுகள், பொலித்தீன் பைகளில் அடைத்த உணவுகள், துரித உணவுகள், வெள்ளைச் சீனி, சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் (Refined Oils), பொரித்த உணவுகள், நிலத்துக்கு கீழ் விளைகின்ற மரக்கறிகள், இனிப்பு அதிகமாகவுள்ள சொக்கலேட், கேக் போன்ற பதார்த்தங்கள் மற்றும் பட்டர், புளோரைட் அதிகமாக உள்ள தண்ணீர், தேநீர், கோப்பி, அற்ககோல், கார்போனேட்டட் பானங்கள், மென்பானங்கள் ஆகியவற்றையும் தைரொய்ட் சுரப்பியில் குறைபாடு உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும்.

# சளித்தொல்லை, மூக்கடைப்பில் இருந்து விடுபட சிறந்த வழி



மழைக்காலத்தில் அடிக்கடி மூக்கடைப்பு ஏற்படும். இவ்வாறு மூக்கடைப்பு ஏற்படுவதற்கு சளி, அலர்ஜி, சைனஸ் பிரச்சினைகள் போன்றவை முக்கிய காரணங்களாக இருக்கும். அதிலும் சளி அல்லது அலர்ஜியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மூக்கின் வழியாக தூசிகள் செல்கின்றமையால், எரிச்சலை ஏற்படுத்துவதுடன், மூக்குத் துவாரங்களில் புண்களை ஏற்படுத்திவிடும். இதனால் வெளியேறக்கூடிய அதிகப்படியான சளியானது உற்பத்தி செய்யப்பட்டு, மூக்கிலேயே தங்கி அடைப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன.

மூக்கடைப்பு சுவாசப்பாதைகளில் உண்டாகும் அலர்ஜியால் ஏற்படுகிறது. சைனஸ் பிரச்சினை இருப்பவர்களுக்கு மூக்கடைப்பு அவ்வப்போது இருக்கும். குறிப்பாக மழைக்காலங்கள் குளிர்காலங்களில் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாவார்கள்.

மேலும் வறட்சியான காற்றை அதிகப்படியாக சுவாசிக்க நேர்ந்தாலும், மூக்கில் அடைப்புகள் ஏற்பட்டு, எரிச்சலை ஏற்படுத்தும். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் சளித் தொல்லை பொதுவாகவே காணப்படும் பிரச்சினை ஆகும். இதனால் சுவாசிப்பதில் சிரமம், தொண்டை வலி, மூக்கடைப்பு , சைனஸ், ஆஸ்துமா போன்றன ஏற்படுகின்றன.

தொண்டை அரிப்பு, தொண்டைப்புண் ஆகியன சளி காணப்படும் சந்தர்ப்பங்களில் ஏற்படும். அத்துடன் சளித்தொல்லை காணப்படும் போது தூங்குவதும் சிரமமாக இருக்கும். மூக்கில் சளி அடைத்துக் கொண்டிருப்பதால் தான் மூக்கடைப்பு பிரச்சினை உண்டாகிறது. அதனால் முதலில் மூக்கில் இருக்கும் சளியை வெளியேற்றுவது முக்கியம். மூக்கடைப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பாலில் சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்து கொதிக்கச் செய்து கருப்பட்டியுடன் கலந்து குடித்து வரலாம்.

கறிவேப்பிலை இலைகளை நெல்லிக்காயுடன் சேர்த்து அரைத்து வடி கட்டி காலையில் வெறும் வயிற்றில் குடித்து வரலாம். ஒரு செப்புக் குவளையில் துளசி இலைகளைப் போட்டு தண்ணீர் ஊற்றி 8 மணிநேரம் ஊறவைத்துக் குடித்து வருவதன் மூலமும் சளித் தொல்லையிலிருந்து விடுபட முடியும். வேப்பிலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து நன்றாக சுத்தம் செய்து குளிக்கின்ற நீரில் கலந்து ஊற வைத்துக் குளிக்கலாம். இத்துடன் சிறிதளவு மஞ்சள் பொடியையும் சேர்த்துக் குளிக்கலாம்.

பழச்சாறுகள் குடித்து வருவதன் மூலமும் மற்றும் விற்றமின் C நிறைந்த பழங்கள், காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும். கொறுக்காப் புளியை உணவில் அதிகளவில் சேர்க்க வேண்டும். ஏனெனில் இது அதிகளவில் தயமினைக் கொண்டுள்ளது. இது சளி உற்பத்தி செய்யும் தன்மையை குறைத்து நுரையீரலை சுத்தம் செய்யக்கூடிய இயற்கையான கிருமிநாசினி ஆகும்.



டாக்டர்
ஆஷா லெனின்
-தமிழ்நாடு,
இந்தியா

## இலக்கிய நயம்

# கோபமும் சின்ன ஊடலும் கூட சுவைதான்

யாழ். மகள் சைந்தவி



உண்மையாக காதலிக்கும் போது ஆண்களுக்கு தன் காதலி தேவதைப் போல் தான் காட்சி அளிக்கிறாள். அவளின் ஒவ்வொரு அசைவும் ஓராயிரம் கவிதைகளை சொல்கிறது, அவளின் நெருக்கம் சுகமாக இருக்கிறது, சிறிய பிரிவும் பெரிதாக வலிக்கிறது. கோபமும் சின்ன ஊடலும் கூட சுவையாகத் தான் இருக்கிறது. காதலில் விழும் போது ஒருவனின் இதயம் வேலை செய்யத் தொடங்குகிறது, ஆனால் அவன் மூளை வேலை செய்வதை நிறுத்தி விடுகிறது, இதனால் தான் உலகில் உள்ளோர் காதல் பித்து பிடித்தவன் என்று கூறுகின்றனர். இப்படி காதலியின் நெருக்கத்தை உணர்ந்து காதல் பித்தேறிய தலைவன் கூறும் அழகான பாடல் இது.

**ஒடுங்கு ஈர் ஓதி ஒள் நுதற் குறுமகள்**
**நறுந் தண் நீரள் ஆர் அணங்கினளே**
**இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்**
**சில மெல்லியவே கிளவி**
**அனை மெல்லியல் யான் முயங்குங்காலே.**

அதாவது - அழகாக ஒடுங்கிய அடர்த்தியான கூந்தலை உடையவள், பிறை போல் வளைந்த வாசனை நெற்றியை உடைய சின்னப் பெண், சுவையான குளிர்ந்த நீரைப் போன்றவள் என் தலைவி, அவளைப் பிரிந்தால் வருத்தம் தருகிறாள், அவள் இப்படிபட்டவள் தான் என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை, அவளைப் பற்றி சொல்ல வார்த்தையில்லை. கொஞ்சம் தான் பேசுகிறாள், ஆனால் திரும்பத் திரும்ப அவள் பேச்சைக் கேட்க வேண்டும் என்று தோணுகிறது, அணைக்கும் போது மென்மையான இலவம் பஞ்சால் செய்யப்பட்ட தலையணை போல் மென்மையாக இருக்கிறாள்.

ஒரு ஆடவனுக்கு உள்ள ஐம்புலன்களும் பெண்ணால் சுகப்படுகின்றன என்று இந்தப் பாடல் அழகாகக் கூறுகிறது. தலைவியின் கூந்தலை காண்பது கண்ணுக்கு விருந்தாகவும், அவளின் வாசனை நெற்றியை உச்சி நுகர்தல் மூக்கிற்கு இன்பமாகவும், சுவையான குளிர்ந்த நீர் போல் இருக்கும் அதரம் சுவைக்க இன்பமாகவும், அவளின் சுவையான பேச்சு காதுக்கு இன்பமாகவும், அவளின் மென்மையான உடலை கட்டித் தழுவுவது உடலுக்கு (மெய்யுக்கு) இன்பமாகவும் இருப்பதாக இந்தப்பாடல் கூறுகிறது, அவளின் நெருக்கம் இன்பத்தையும் பிரிவு துன்பத்தையும் தருகிறது.

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்

முன்னர் அப்பா இருந்த போது அவரிடம் உதவி பெற்றவர்களும் அவர்களுக்கு என்ன உதவி தேவையெண்டாலும் தங்களிடம் கேட்கும்படி சொன்னவர்களும் நமக்கு உதவி தேவைப்படுகின்ற போது உதவாதது ஏன்? அப்படியென்றால் அவர்கள் எல்லாம் பொய்தானா சொன்னார்கள்? மனிதர்களில் நீதி நேர்மையானவரே கிடையாதா? எங்களுக்கு காசை விட மனிதர்கள் தான் முக்கியம் என்றவர்கள் கூட இப்போது நம்மைக் கண்டால் விலகிப் போகின்றார்களே! அப்படியென்றால் நாங்கள் மனிதர்கள் இல்லையா? அப்படியென்றால் இந்த உலகத்தில் நாம் ஏன் இருப்பான்? நாங்கள் செத்துப் போனால் யாருக்காவது நட்டமா? இப்போது உதவி செய்யாதவர்கள் நாங்கள் செத்தால் மட்டும் கவலைப்படவா போகிறார்கள்? அதனால் என்ன பயன்? கடவுளே நீ இருந்தால் எங்களுக்கு ஒரு வழிகாட்டு நான் யாரையும் நம்பவில்லை! நீ மனிதனாக வந்து மற்றவர்களுக்கு உதவி செய்திருக்கிறாய் என்றால் எனக்கு ஏன் இப்போது உதவி செய்யக்கூடாது? அல்லது நீ முற்காலத்தில் மட்டும் தான் உன்னை ஆண்டவன் என்கிறார்களா? நீ எம்மை ஆள்பவன் இல்லையா? நான் விரும்பியா இந்த வாழ்க்கையை பெற்றேன்? நாம் விரும்பியா இந்த வீட்டிற்கு வந்தோம்? யாருக்கு என்ன பாவம் செய்தோம்? ஏன் எங்களை இப்படி துரத்தியடித்துக் கொள்கிறார்கள்? இதனால் யாருக்கு லாபம்? நாம் யாரிடம் என்ன கேட்டோம்.

கடவுளே! இனிமேல் என்னால் இந்தத் துன்பத்தை தாங்க முடியாது. நான் சாகப்போகின்றேன் என்று அளவு கணக்கில்லாமல் சீலனின் மனதில் எண்ணங்கள் ஓடின. ஆனாலும் “திடீரென நான் இறந்தால் அம்மாவின் நிலை என்ன செய்வினம்?” இந்த எண்ணங்கள் அவனை வாழ வேண்டும் என்ற எண்ணத்திற்குள் இழுத்து வந்து நிறுத்தின. அந்த நினைவினால் இந்த உந்தப்பட்டவன் மெல்ல எழுந்து போய் பேருந்துக்காக காத்திருந்த பெண்களிடம்“கச்சான் வேணுமா?, கச்சான் வேணுமா?” என்று மரத்துப் போன நிலையில் எதுவித உணர்ச்சியும் இல்லாமல் மீண்டும் மீண்டும் சொன்னான். அப்போது அவனுக்கு தன்னைப் பிறர் கவனிப்பதா, பார்ப்பதோ பெரிதாகப்படவில்லை. அங்கேயிருந்த சில பெண்கள் அவனைப் பார்த்தோ அல்லது கச்சான் தேவை என்றோ கச்சான் வாங்கினார்கள். அன்றைய பொழுது சாய்ந்ததும் வீடு திரும்பினான் சீலன்.



தொடர்கதை

பாகம் 06

சி .ஜெயகுகன்
கொழும்பு

அடுத்த நாள் காலையில் கச்சான் விற்பதற்கு சீலன் வந்து ஓர் பேருந்தில் ஏறி கச்சானை விற்கத் தொடங்கினான். அப்போது பேருந்தில் ஏறிய மற்றொரு சிறுவன் சீலனை தள்ளிக் கொண்டு தான் கச்சானை விற்றான். இருவரும் பேருந்தை விட்டு இறங்கியதும் அந்தப் பையன் சீலனின் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டான். சீலனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நெஞ்சு கனத்த அழுகையுடன் அப்பால் போனான். அதனைப் பார்த்த மற்றைய சிறுவன் டேய் இனிமேல் நான் வந்தா நீ அந்த பஸ்ஸை விட்டு இறங்கி விட வேணும் என்றான். சீலன் எதுவும் பேசாமல் அப்பால் சென்று தன் வியாபரத்தை தொடர்ந்தான்.

இப்படியே சில நாள்கள் போயின, பின்னர் எப்படியோ ஒருவாறு வவுனியா வந்து சேர்ந்தனர். வந்ததும் தடுப்புமுகாமில் அவர்களை வைத்தனர். முகாம் என்றால் அது ஏதோ வசதியான, தனித்தனியாக மக்கள் இருக்கும் இடமல்ல, வெறும் படங்கு ஒன்றின் இரு முனைகளில் ஒன்று மரத்திலும் மற்றைய இரு முனைகள் தரைக்கொட்டகைகளிலும் தொடுக்கப்பட்டது தான் அந்த முகாம்.

அதிலே அகதிகளின் சொத்துக்களாக உரப்பைகளில் நிரப்பப்பட்ட சில அத்தியவாசியப் பொருள்கள் சிந்திக் கிடக்கும். சிறுவர்கள் அகதி முகாமிலேயே அறிமுகமான நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருப்பர். சில பெண்கள் மண்ணெண்ணை அடுப்புக்களிலும் விறகு அடுப்புக்களிலும் சமையல் செய்து கொண்டிருப்பர். அவர்கள் அங்கே அனுமதி பெற்று வேலைக்குச் சென்று உழைப்பர். அவ்வாறு இல்லாவிடில் அங்கேயிருந்து காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தனர். முகாமில் வழங்கப்பட்ட தொகை நிறுத்தப்பட்டதும் எல்லோர் வாழ்விலும் ஈடாட்டம் ஏற்பட்டது.

மக்கள் தம்மிடம் இருந்த நகைகளை விற்றும், தெரிந்தவர்களிடம் கடன்பட்டும் காலத்தை ஓட்டினர். சீலனின் குடும்பமும் அதில் ஒன்று. அவர்களுக்கோ உழைப்பதற்கு அப்பா இல்லை. கிடைக்கும் சொற்ப உதவித் தொகையிலும் என்றாவது வேலை கிடைத்தால் அதிகமாக குடும்பம் பாய்மரமின்றி ஆழ்கடலில் அலைந்து திரியும் கப்பலைப் போல திக்குத் திசை தெரியமால் போய்க் கொண்டிருந்தது.

பட்டகாலிலேயே படும் என்பதைப் போல அங்கே மலேரியாவும், வயிற்றோட்டமும் பரவ ஆரம்பித்தன. மக்களின் தலையிலே பாறங்கல் விழுந்ததைப் போல இருந்தது. அந்த நோய் சீலனின் தங்கையின் உயிரைக் குடித்தது. உரிய வைத்திய வாதியின்றி அவளின் உடலை ஊர் பெயர் தெரியாத இடத்தில் முகாமில் அனுமதி பெற்றுக் கொண்டுபோய் அக்கம் தொடர்ந்தது. செய்தார்கள். கொடுமை கொடுமையாய் வாழ்வில் பிரச்சினையே தொடர்ந்தது.

சிறிது காலத்திற்கு எப்போதும் போல முகாம் வாழ்க்கை மாற்றமன்றி ஓடியது. முகாம் பிள்ளைகளுக்காய் முகாமிலேயே பாடசாலை திறக்கப்பட்டது. அதனைப் பாடசாலை என்று சொல்வதிலும் பார்க்க தார் தடவிய கூரை போடப்பட்ட கொட்டகை என்று சொல்லல் வெயில் நேரம் தார் தடவிய கூரையினால் வெக்கை (வெப்பம்) தலைக்கிறங்கும். அப்போது எப்படிப் படிப்பேறும் என்பது எந்த திட்டமியலாளருக்கும் தெரியாமல் போனது ஏனோ?


(தொடரும்...)

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் இயற்ற வந்தோம். எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப் பில்லை என்று கும்மியடி.”**

**என்றவாறு புரட்சிக் கவிஞன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் திகழும் - தொகுப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர், செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி முகாமை யாளர் எனப் பல பரிமாணங்களில் ஊடகத் துறையில் மிளிரும் Capital தொலைக்காட்சியின் நிகழ்ச்சி முகாமையாளர் செல்வி. சௌமியா ஸ்ரீஸ்கந்தராஜாவுடனான நேர்காணல்.**



# திறமையைதக்க முறையில் நிரூபித்தலே அனைத்துக் களங்களையும் கைக்கொண்டு சாதிக்கப் போதுமானது



**நேர்காணல்**

**நேர்கண்டவர் - விஸ்ணுபிரியா ஸ்ரீகாந்தன்**

## சௌமியா ஸ்ரீஸ்கந்தராஜா

**1) ஊடகத்துறை சார்ந்தவராக நீங்கள் இருந்த போதிலும், யார் இந்த சௌமியா என அறியும் ஆவல் வாசகர்களுக்கு நிச்சயம் காணப்படும். எங்கள் வாசகர்களுக்காக உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம்?**

நான் சௌமியா ஸ்ரீஸ்கந்தராஜா. அப்பா ஸ்ரீஸ்கந்தராஜா, அம்மா சுவர்ணலதா. நங்கள் ஐந்து பெண்களும் ஒரு ஆணுமாக மொத்தம் ஆறு சகோதரர்கள். நான் எனது தரம் ஒன்று முதல் உயர் தரம் வரையான கல்வியை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் பயின்றேன். அதனைத் தொடர்ந்து யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றதுடன், தற்போது அதே துறையில் களனிப் பல்கலைக்கழகத்தில் முதுமானிக் கற்கைநெறியைத் தொடர்ந்த வண்ணம் உள்ளேன்.

**2) ஒரு வெற்றிகரமான ஊடகவியலாளராக உங்கள் பயணம் எங்கிருந்து ஆரம்பித்தது? நீங்கள் கடந்து வந்த பாதை எத்தகையது?**

ஆரம்ப காலகட்டங்களில் எனக்கு ஊடகத்துறை சார்ந்து எந்தவித ஈர்ப்போ, திட்டங்களோ, ஆர்வங்களோ பெரிதாகக் காணப்படவில்லை. நான் எனது உயர்தரக் கல்வியை நிறைவு செய்த பிற்பாடு, டான் தொலைக் காட்சிக் குழுமத்தில் பகுதி நேரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த எனது சகோதரியின் ஊடாக அங்கு பணிபுரிவதற்கான அழைப்புக் கிடைத்தது. அங்கு நான் பிரதானமாக எதிர்பார்த்துச் சென்றது உள்ளக அலுவலகப் பணிகளையே. ஏனெனில் அச்சமயம் எனக்கு நிகழ்ச்சி தொகுத்து வழங்கல், பொது வெளியில் உரையாடுதல் தொடர்பாக ஒரு வித தயக்கம் காணப் பட்டது. ஆனால் அங்கிருந்த மேலாளர்கள் அளித்த ஊக்கத்தின் காரணமாக நிகழ்ச்சித் தொகுத்து வழங்கலை மேற்கொண்டேன். அதற்குக் கிடைத்த வரவேற்பு என்னை நிகழ்ச்சித் தொகுப்பாளராக மாற்றிய அதே சமயம் கட்டுப்பாட்டு அறை அலுவலராகவும் பணி புரிந்து கொண்டிருந்தேன். அதனைத் தொடர்ந்து நான் பல்கலைக்கழக அனுமதி பெற்றுத் தேர்வான பின்னும், எனது வேலை நேரத்தை பகுதி நேரமாக மாற்றி அங்கேயே எனது பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தேன். நான் அங்கு பணியாற்றத் தொடங்கி மூன்று வருடங்கள் கடந்த நிலையில் டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் ஒரு பிரிவான Holy Mary தொலைக் காட்சியின் அனைத்துப் பொறுப்புகளையும் நிர்வகித்து நடாத்தும் வாய்ப்பு கிடைத்தது. சொல்லப் போனால் ஹோலி மேரி தொலைக்காட்சியின் உத்தியோக பூர்வ முறையில் அறிவிக்கப் படாத தலைவர் எனக் கூறலாம். அதே சமயம் பல்கலைக் கழகத்திலும் ஊடகத் துறை சார் சிறப்புப் பிரிவில் எனது கற்கை நெறியைத் தொடர்ந்து கொண்டிருந்தேன்.

இவ்வாறு சென்று கொண்டிருந்த நிலையில் பல்கலைக் கழகத்தின் தொழிற் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்வதற்காக ஆறு மாதங்கள் ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்திலும் பணி புரிந்தேன். பிற்பாடு, நான் தொலைக் காட்சியில் இணைந்து 7 வருடங்கள் கடந்த நிலையில் உத்தியோகபூர்வமாக Holy Mary தொலைக்காட்சியின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று நிர்வகித்தேன். மேலும் நான் நிகழ்ச்சித் தொகுப்பாளர், செய்தி வாசிப்பாளர், ஆவணப் படத் தயாரிப்பாளர், அறிவிப்பாளர், செயற்பாட்டாளர் என ஊடகத் துறையின் அனைத்துப் பக்கங்களிலும் என்னைப் பொருத்தி வளர்த்துக் கொண்டேன். நான் தெரிவு செய்த கற்கைநெறி, என் துறைசார் பல்வகைப் பிரிவுகளில் என்னை விரிவாக்கிக் கொள்ள வழிகோலியது. கடந்த வருடம் நான் கப்பிட்டல் தொலைக் காட்சியில் உதவி நிகழ்ச்சி முகாமையாளராக இணைந்து, தற்போது நிகழ்ச்சி முகாமையாளராகவும், தொகுப்பாளராகவும் செயற்பட்டு வருகிறேன். அது மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியில் வெளியக அறிவிப்பாளராகவும் பணியாற்றி வருகிறேன்.

**3) ஊடகத் துறை சார் பெண்மணியாக, உங்கள் சாதனைக்கு பக்கபலமாக திகழ்ந்த நபர்கள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

நிச்சயமாக, இத்துறையில் நான் இந்த நன் நிலையில் இருப்பதற்கான முதன்மைக் காரணமாக எனது குடும்பத்தினரையே கூற வேண்டும். ஏனெனில் போருக்குப் பின்னான சூழலில் ஆண்களையே ஊடகத் துறைக்குள் அனுமதிப்பதற்கான அச்சம் எம் சமூகத்தில் மேலோங்கியுள்ள போதிலும், ஒரு பெண்ணான எனக்கு இத் துறைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியையும் பரிபூரண சுதந்திரத்தையும் வழங்கியதோடு, இத்துறையில் என் முன்னேற்றத்திற்கு அவர்கள் வழங்கிய பங்களிப்பும், ஊக்கமும் வார்த்தைகளில் அடக்க முடியாதவை. மேலும் எனக்கு கிடைத்த நல்ல தோழர்கள். அவர்களின் உள்ளார்ந்த நட்பு, என் முன்னேற்றத்தின் மீதான உண்மையான அக்கறை, உதவிகள், பின்னூட்டங்கள் மற்றும் அவர்கள் எனக்காகப் போரடிப் பெற்றுத் தந்த வாய்ப்புக்கள் எனக் கூறிக் கொண்டே போகலாம். அவர்களின் இன்றியமையாத பங்களிப்புகள் என் சாதனைக்கு முக்கியமான படிக்கற்களாக அமைந்தன. அதனைத் தொடர்ந்து நான் நிச்சயம் குறிப்பிட்டு சொல்ல வேண்டியவர்கள் எனது விரிவுரையாளர்கள். அதிலும் குறிப்பாக அன்றைய எமது பிரிவின் துறைத் தலைவர் கிருத்திகா தர்மராஜா மற்றும் கலாநிதி. சி. ரகுராம் ஆகியோரின் வழிகாட்டலும், நெறிப்படுத்தலும் இன்றியமையாதவை. என் வேலை நேரங்களைப் பார்த்து அவர்கள் விரிவுரை நேரங்களை ஒழுங்குபடுத்தியவை உட்பட்ட பல நிகழ்வுகளை நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் எனது தொழில் தருநர்கள், என் மேலாளர்கள் என்மேல் நம்பிக்கை வைத்து சுதந்திரமளித்து என் முன்னேற்றத் திற்கு அமைத்துத் தந்த களம் அனைத்திற்கும் அடிப் படையானது எனக் கூறலாம்.


**4) ஊடகத் துறை ஆரம்பித்த காலத்திலிருந்தே அதில் கணிசமான அளவு பெண்களின் பங்களிப்பு காணப் படுகின்றதென்பதை யாராலும் மறுக்க முடியாதெனினும், அவர்களை ஒரு குறித்த வரையறைக்குள் மட்டும் வைத்துப் பார்க்கும் போக்கு காணப்படுகிறது. உதாரணமாக பெண்கள் என்றால், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், அழகுக்கலை, செய்தி வாசிப்பு, என்ற வட்டத்திற்குள் அடக்கி விட்டு, அனல் பறக்கும் அரசியல் விவாதங்கள், காரசாரமான கலந்துரையாடல்கள் ஆகிய களங்கள் பெரும்பாலும் ஆண்களுக்குரியவையாகவே இன்றும் இருக்கின்றன. சிற்சில விதிவிலக்குகள் காணப்படினும் பெரும்பான்மை நிதர்சனம் இதுவே. இது தொடர்பான தங்களது பார்வை என்ன? இவ்விடயம் தொடர்பான தங்களது சொந்த அனுபவங்கள் எத்தகையவை? அதை தாங்கள் எவ்வாறு கடந்து வந்தீர்கள் ?**

ஊடகத்தின் அரசியல், சமூகம் சார் களங்களில் பெண்களின் பங்களிப்பு இல்லையென்று முற்றுமுழு த ாக கூறிவிட முடியாது. இருப்பினும் எம் சமூகத்தில் நாம் பெண்களை ஒரு மாதிரி வார்ப்பிற்குள் பொருத்தி பார்த்தே பழகி விட்டோம். பெண்கள் பொழுது போக்கு, கலை, அழகியல் போன்ற விடயங்கள் செய்வதற்கு மட்டுமே பொருத்தமானவர்கள் என்பதுவும், முக்கியமான விவாத விடயங்கள் ஆண்களுக்கானவை என்ற ரீதியிலான தவறான கண்ணோட்டமும் மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது. ஆனால் நாம் அவ்வாறல்ல, எம்மாலும் இவை உட்பட்ட எல்லா நிகழ்ச்சிகளையும் வெற்றிகரமாக நிகழ்த்த முடியும் என நிரூபித்துக் காட்டுவதன் மூலம் அந்த விம்பத்தை உடைத்து எம்மைப் பற்றிய நம்பிக்கையை உருவாக்கி முன்னேற முடியும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# திறமையைதக்க முறையில் நிரூபித்தலே அனைத்துக் களங்களையும் கைக்கொண்டு சாதிக்கப் போதுமானது

## சௌமியா ஸ்ரீஸ்கந்தராஜா






(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு ஏற்பட்ட இத்தகைய சவால்களை ஒரு வெற்றியுடன் கூடிய திருப்திகரமான நிகழ்ச்சி வழங்கல் மூலமாக என்னை நிரூபித்துக் கடந்து வந்தேன். எமது திறமையை தக்க முறையில் நிரூபித்தலே, ஆண், பெண் பேதமின்றி அனைத்துக் களங்களையும் கைக்கொண்டு சாதிக்கப் போதுமானது.

**5) உங்களுடைய ஊடகப் பயணத்தில் நீங்கள் எத்தனையோ மறக்க முடியாத சம்பவங்களை சந்தித்திருப்பீர்கள். அவை மகிழ்ச்சியானவை, நெகிழ்ச்சிக்குரியவை, சுவாரசியமானவை எனப் பல உணர்வார்த்தங்கள் நிறைந்தவையாகக் காணப்படும் அவை பற்றிய ஒரு நினைவு மீட்டல்?**

நான் மகிழ்ச்சிகரமான சம்பவமாக பகிர்ந்து கொள்ள விரும்புவது நான் நேர்கண்டவர்களின் நல் வாழ்த்துகளையே. நான் பல நேர்காணல் நிகழ்ச்சிகளை நாடாத்தியுள்ளேன். அவற்றுள் ஆறு, இந்தியப் பிரபலங்களுடனான நேர்காணல்கள். அவர்கள் அனைவரும் பொதுவாகக் கூறிய ஒரு பின்னூட்டமானது எனது நேர்காணல் வித்தியாசமானதாகவும் ஒரு தோழமையுடன் கூடியதாகவும் இருந்ததென்பதே. அவர்களின் மன மகிழ்வுடன் கூடிய பின்னூட்டங்கள் பல விருதுகள் வெல்வதற்குச் சமனான மன மகிழ்வைத் தர வல்லவை.

மறக்கமுடியாத, மறக்கவே இயலாத ஒரு சம்பவமெனின் கஜன் சுலக்ஷன் ஆகிய இருவரும் எனது பல்கலைக்கழகத் தோழர்கள். அவர்களுக்கும் எனக்குமிடையில் சகோதரத்துவமனா நல்ல நட்பு காணப் பட்டதுடன் அவர்கள் என் குடும்பத்தாருடனும் நெருக்கமானதொரு நல்லுறவைக் கொண்டிருந்தனர். அன்று 2016 ஒக்ரோபர் சாதரணமானது என நினைத்த அந்நாள் விடிந்தது. அன்றும் வழமை போல காலை 6:30 மணிக்கு தொலைக்காட்சியில் என் செய்தி வாசிப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நான் மு.ப 5:00 மணியளவில் எனது தொலைபேசியை பார்த்த போது, அவர்கள் இருவரும் மரணமடைந்து விட்டனர் என்ற செய்தி குழுக்களில் பகிரப்பட்டிருந்தது. ஆனால் ஆரம்பத்தில் இவற்றை நம்ப முடியாதிருந்தது. பின் அது உண்மை என அறிந்ததும் அச் செய்தி தந்த உறைநிலை வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. ஆனால் என்னால் 6:30 மணி நாளிதழ் வாசிப்பு நிகழ்ச்சியை உடனடியாக ஒத்திப் போடவோ, மீள் ஆயத்தம் செய்யவோ முடியாத சூழ்நிலை. குறுகிய நேரத்தில் இன்னொரு நிகழ்ச்சி வழுங்குனரை ஆயத்தப்படுத்துவது. அந்நேரத்தில் கடினமானதொன்றாக காணப்பட்டது. மனம் நிறைந்த துயரத்துடன் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போதே, அச்சம்பவத்தில் இறந்த நண்பர் ஒருவரின் குடும்பம் வைத்தியசாலையில் தனித்திருப்பதாக அழைப்பு வந்தது. பின் அவர்களுக்கு ஆதரவாக வைத்தியசாலை சென்று சிறிது தாமதமாக கலையகம் சென்று அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்தேன். அப் பத்திரிகை நிகழ்ச்சியில் அவர்கள் இறந்த செய்தியை நானே எந்த வித உணர்வு ரீதியான வெளிக்காட்டல்களும் இன்றி, அத்தனை கவலைகளையும், உணர்வுகளையும் உள்ளே அழுத்தி சாதாரணமாக செய்தி வாசித்த நிகழ்வு என்றுமே மறக்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவம். அந்த ஒரு நாள் மட்டுமன்றி மீண்டும் மீண்டும் அந்த சம்பவம் தொடர்பான செய்திகளை வாசிக்கும் போது அவை தரும் ரணங்களை, நெருங்கிய தோழர்களின் மரணத்தை எவ்வித உணர்வு வெளிகாட்டலுமின்றி கடந்து செல்ல வேண்டி ஏற்பட்ட சூழல் மறக்க இயலாதது.

அது மட்டுமன்றி ஈஸ்டர் குண்டு வெடிப்பும் யாரும் எதிர்பார்த்திராத அதிர்ச்சிகரமானது. ஈஸ்டர் வாழ்த்து நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த போதே இச் செய்தி கிடைக்கப்பெற்றது. அச்சமயத்தில் கலையகத்தின் செய்தியறையில் யாருமே இருக்கவில்லை. உடனடியாக சூழ்நிலையை உள்வாங்கி அவசரமாக அச்செய்தியை தொகுத்து, காணொலியாக்கி, வீட்டிலிருந்து புடைவை தருவித்து தயாராகி குண்டு வெடிப்பு செய்தியை வாசித்த சம்பவமும் என்றுமே மறக்க முடியாதது. அன்றைய நாளில் எத்தகைய மனோ நிலையில் நான் இருந்தேன் என்பது இன்றும் மீட்டெடுக்கக் கடினமானதொன்றே.

**6) ஊடகத் துறையைப் பொறுத்தவரையில் திறமையிருக்கும் அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைத்து விடுவதில்லை. வாய்ப்புக் கிடைக்கும் அனைவருமே சவால்களை வென்று சாதித்து விடுவதில்லை. நீங்கள் எப்படி?**

சவால்கள் இல்லாத துறையும் கிடையாது சவால்களை முறியடிக்காமல் சாதனைகளும் சாத்தியமாகாது, சவால்கள் நபர் சார்ந்து துறை சார்ந்துவேறுபடலாமே தவிர சவால்கள் பொதுவானவை, ஊடகத் துறைக்குள் வந்த பிற்பாடு நான் பல சவால்களை சந்தித்துள்ளேன். அதிலும் குறிப்பாக எம்மைப் பற்றிய விமர்சனங்கள். எத்தனையோ பேர் வெளியிலிருந்து எம்மைப் பற்றிய பாராட்டுக்களையும் நல்ல பின்னூட்டல்களையும் முன்வைத்த போதிலும் வேண்டுமென்றே எம்மை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்கத்தோடு எம் நம்பிக்கையை தகர்க்கும் விதமாக முன்வைக்கும் விமர்சனங்களை முக்கிய சவால்களாகக் கருதலாம். இருப்பினும் நான் எந்த விமர்சனத்தையும் புறம் தள்ளுவதில்லை. அவற்றைக் கேட்டுக் கொள்வேன். கேட்டு உள்வாங்கி அந்த விமர்சனம் உண்மையிலேயே நான் திருத்திக் கொள்ள வேண்டிய விடயம் பற்றியதாயின் அந்த மாற்றங்களை செய்து கொண்டு முன்னேறுவேன்.

அவ்வாறில்லாது எம் மீதான காழ்ப்புணர்ச்சியின் பொருட்டு கூறப்பட்டவற்றை கடந்து செல்வதன் மூலம் வெற்றிகொள்வேன். ஏனெனில் எம்மைப் பற்றிய விமர்சனங்கள் எமது வளர்ச்சியின் அளவீடுகள். முன் சொன்னது போல எம்மால் இது இயலாது என எம் திறமை மீது அவநம்பிக்கை கொள்ளும் போது அவற்றை என்னால் இயலும் என்ற நம்பிக்கையுடன் அவ்வேலைகளை திறம்படச் செய்வதன் மூலம் என் திறமையை நிரூபித்து வெற்றி கொள்வேன். மேலும் ஊடகத் துறையில் பல தரப்பட்ட புதியவர்களுடன் உரையாட வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்கள் எமக்கு குறுஞ்செய்தி அனுப்புதல், அழைப்புக்களை ஏற்படுத்தல் போன்ற இடையூறுகளை ஏற்படுத்துவார்கள். அதற்கஞ்சி நான் சிறிது காலம் ஊடகத்துறையை விட்டு விலகி இருந்தேன். அதன்பின் நான் யோசித்த போது எமது கற்கை நெறியில் உண்மையை வெளிக்கொணர தம் உயிர் உட்பட பல தியாகங்கள் புரிந்த ஊடகவியலாளர்களின் கதைகள் எனக்கு உந்துசக்தியாக அமைந்தன. அவற்றோடு ஒப்பிடுகையில் நான் சந்தித்தவை எல்லாம் பிரச்சினைகளே இல்லை. எனவே தைரியமாக அனைத்தையும் கடந்து வந்தேன்

**7) உங்கள் சாதனைக்குக் காரணமான உங்கள் தனித்துவப் பலங்களாக நீங்கள் கருதுபவை?**

எனது தன்நம்பிக்கையும் ஊக்கமும் நான் எந்த விடயத்தையும் கடினமானது எனக் கருதுவதில்லை. எத்தனை கடினமாயினும் இயலும் என்று செய்து முடிப்பதற்கான தைரியத்தையும் ஊக்கத்தையும் எனக்குள் நானே வளர்த்துக் கொள்வேன். எனக்கே உரிய ஆழமான பரந்த தேடலையும் என் ஆராயும் குணத்தையும் என் முக்கிய பலமாகக் கொள்ளலாம். ஏனெனில் ஒரு மருத்துவம் சார்ந்த நேர்காணல் எனின் எனக்குத் தெரிந்தவர்களிடம் ஒரு சிறிய ஆய்வை மேற்கொள்வேன்.

அவர்கள் அவ் வைத்தியரை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படின் எத்தகைய வினாக்கள் எழுப்புவீர்கள் என கேட்டு அறிந்து கொள்வேன். அதில் அதிகம் பகிரப்பட்ட கேள்விகளையே நான் நேர்காணலுக்காகத் தேர்ந்தெடுப்பேன். அவற்றைத் தவிர என் தோழமையான அணுகுமுறை, எல்லாவற்றையும் கேட்டுக் கிரகித்தல் ஆகியவற்றைக் கூறலாம். ஆனால் அனைத்தையும் விட முதன்மையானதாக நான் கருதுவது என் தனித் தமிழையே. என் தனித் தமிழ் உச்சரிப்பும் பாணியும் பலரால் பாராட்டப்பட்டன. நல்ல பல பின்னூட்டல்களைப் பெற்றுத் தந்த என் முக்கிய பண்பாகவும் பலமாகவும் கருதுகின்றேன்.

**8) தென்னிந்திய தமிழ்த் தொகுப்பாளர்களிடமிருந்து எம்மவரை வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாக எமது தனித் தமிழைக் கூறலாம். ஊடகத்துறையில் தனித்தமிழ் என்பது எந்தளவுக்கு சாத்தியமானது எனக் கருதுகின்றீர்கள்?**

நான் இதுவரையான காலப்பகுதியில் தென்னிந்திய கலைஞர்கள் அறுவர் உட்பட பல நேர்காணல் நிகழ்ச்சிகளை நடாத்தி உள்ளேன். அவர்கள் அனைவருடனும் நான் தனித்தமிழ் மொழியிலேயே நேர்காணல்களையும் உரையாடல்களையும் மேற்கொண்டுள்ளேன். அதற்குக் கிடைத்த பின்னூட்டல்கள் சிறந்தவையாகவும் மென்மேலும் ஊக்கமளிப்பவையாகவும் இருந்தன. நாம் தான் தனித்தமிழில் உரையாடுவதை கௌரவக்குறைச்சலாக கருதி, மக்கள் விரும்பமாட்டார்கள் என்ற போலியான வேலியை உருவாக்கி வைத்திருப்பதுடன் தென்னிந்திய தொகுப்பாளர்களையும் அப்படியே நகலெடுக்க முற்படுகின்றோம். இதனால் நாம் எங்களுக்குரிய பாணியைத் தொலைப்பதோடு மட்டுமல்லாமல் நம் தாய் மொழியின் பரந்துபட்ட பரிணாமத்தையும் குறுக்கிக் கொள்கின்றோம். நான் நேர்காணல்கள், விவாதங்கள் மட்டுமன்றி தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சிகளைக் கூடத் தமிழிலேயே தொகுத்து வழங்குவேன்.

# பச்சைப்பயறின் நன்மையும் சிறப்பும்



நமது உடல் ஆரோக்கியத்திற்கு நாம் உட்கொள்ளும் உணவு வகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதில் சிறுபயறு என்று அழைக்கப்படும் பச்சைப்பயறு முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தப் பயறை பாசிப் பயிறு என்றும் கூறுவார்கள். இதில் இரும்புச் சத்தும் புரதச்சத்தும் அதிக அளவு உள்ளது.

**பச்சைப்பயறு சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்**

உடல் எடையைக் குறைக்க பச்சைப்பயறு உதவுகிறது. இது பசியைத் தாங்கும் சக்தி கொண்டது. எனவே உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் சிறுபயறை ஒரு நேர உணவாகச் சாப்பிட்டு வரலாம். இப்படிச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை படிப்படியாக குறையும். பச்சைப் பயறை முளைக்கட்டி சாப்பிடும் போது ரத்தத்தில் ஹீமோகுளோபினை அதிகரிக்கச் செய்யும். இதனால் ரத்த சோகை வராமல் காத்துக் கொள்ளலாம்.

பச்சைப்பயறு, தேங்காய் மற்றும் ஏலக்காய் ஆகியவற்றை நன்கு அரைத்து பால் எடுத்துக்கொள்ளவும். அதனுடன் சர்க்கரை கலந்து சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

வயிற்றுப்புண்ணை குணப்படுத்துவதற்கு பாசிப் பயறை சாப்பிட்டு வரலாம். இது காரத்தன்மையை கட்டுப்படுத்தும். அதனால்தான் அல்சர் பிரச்சினை உள்ளவர்களுக்கு பாசிப்பயறு குழம்பு வைத்துக் கொடுப்பார்கள். அதேமாதிரி அதிகமான இனிப்புத் தன்மையையும் குறைக்கும். நாம் செய்யும் பாயாசம் அதிக இனிப்பாக இருந்தால் திகட்டாமல் இருப்பதற்காக பாசிப் பருப்பைத்தான் சேர்ப்போம். எனவே பச்சைப்பயறு உடலுக்கு மிகவும் நல்லது. இதில் கார்போஹைட்ரேட் காணப்படுவதால் மற்ற தானியங்களை விட எளிதில் செரிமானம் அடைய உதவுகிறது.

இரத்த அழுத்தத்தை சீராக்க பாசிப்பயறு முக்கிய பங்கு ஆற்றுகிறது. ஏனென்றால் உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய என்ஸைம்கள் செயலினை தடுத்து இரத்த அழுத்தத்தில் இருந்து நமது உடலை பாதுகாக்கிறது.

இதயத்தை பாதுகாக்க பாசிப்பயறு உணவுகள் முக்கிய பங்கினை அளிக்கின்றன. ஏனென்றால் இதில் காணப்படக்கூடிய ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் உடம்பில் கெட்ட கொழுப்புகள் சேர்வதை தடுத்து மாரடைப்பு, பக்கவாதம் ஏற்படுவதை முற்றிலுமாக தடுக்கிறது.





## பச்சைப் பயறு தோசை

**தேவையான பொருள்கள்**

பச்சைப்பயறு - 1 கப்
சின்ன வெங்காயம் - 5
காய்ந்த மிளகாய் - 2
பூண்டு - 2
சீரகம் - 1 தேக்கரண்டி
முந்திரி -3
உப்பு - சிறிதளவு

**செய்முறை** - பச்சைப்பயறை இரவே தண்ணீரில் ஊறவைத்து விடவேண்டும். காலையில் ஊறவைத்த பச்சைப்பயறை மிக்ஸியில் போட்டு அதனுடன் மேற் சொன்ன அனைத்தையும் போட்டு, சிறிது உப்பு போட்டு அரைக்கவும். தோசை மாவு பதத்துக்கு மாவை கரைத்துக்கொள்ளவும். சூடான கல்லில் , மாவை ஊற்றி இருபுறமும் எண்ணெய் விட்டு சுட்டு எடுக்கவும். தக்காளி சட்னி, வெங்காய சட்னியுடன் பொருத்தமாக இருக்கும்.

புரதம் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் அதிகமாக உள்ளன. வயிற்றுக்கு நல்லது. காலை நேர போஷாக்கான உணவாக அமையும். தேவையான சத்து கிடைக்கும்.




## காலை உணவு



காலை உணவுகளை தனியே அரிசி மாவில் செய்வதை விட, சற்று வித்தியாசமாகவும், சத்தான முறையிலும் செய்து சாப்பிடலாம். அந்த வகையில் உங்கள் வீட்டில் சிறுதானியங்கள் இருந்தால் அதை வைத்தே சூப்பரான முறையில் தோசைக்கு மாவு தயாரிக்கலாம். அதிலும் சரியான முறையில் மாவு தயாரிக்க சில இலகுவான வழிமுறைகளை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

1. உங்கள் டயட்டை மிகவும் சத்துள்ளதாக மாற்ற நினைத்தால் வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய ஆரோக்கியமான சிறுதானிய வகைகளுடன் உங்கள் நாளை ஆரம்பிக்கலாம். நீங்கள் நடுநிலை தானியங்களையும் தேர்வு செய்யலாம். ஆனால் மேற்கண்ட தானியங்களில் நார்ச்சத்து மற்றும் ஊட்டச்சத்துக்களின் உள்ளடக்கம் அதிகம் இருப்பதால், அவை உங்கள் குடலை சிறந்த முறையில் சுத்தப்படுத்த உதவுகின்றன.

2. சிறுதானிய தோசை அல்லது இட்லி செய்வதற்கு நீங்கள் ஒவ்வொரு சிறுதானிய வகையையும் தனித்தனியாக ஊற வைப்பது அவசியம். தானியங்களை நன்கு கழுவி குறைந்தபட்சம் 6–8 மணி நேரம் ஒழுங்காக ஊற வைக்க வேண்டும்.

3. ஒரு நேரத்தில் ஒரு சிறுதானியத்தை மட்டும் சாப்பிட்டால் போதுமானது. ஆனாலும் நீங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தானியங்களை கலந்து சமையலில் உபயோகப்படுத்தலாம். தானியங்களை கலந்து சாப்பிடுவது என்பது நீங்கள் சாப்பிட முடியாத அல்லது நச்சுத் தன்மையுள்ள ஒன்றை உட்கொள்கிறீர்கள் என்று அர்த்தமல்ல. உங்களுக்கு குடலுக்கு எந்த ஒரு அமிலத்தன்மை பிரச்சினையும் கொடுக்கவில்லை என்றால், ஒருமுறை மட்டும் பல தானியங்களை ஒன்றாக கலந்து சமைத்து சாப்பிடலாம்.

4. அதேபோல சிறுதானியங்களுடன் நீங்கள் பயறு வகைகளையும் சேர்க்கலாம். பயறு வகைகளை எப்போதும் தனித்தனியாக ஊற வைக்கவும்.

5. அந்த வகையில் நீங்கள் தினை தோசைக்கு, தினையுடன் பயறு வகைகளை சேர்க்கும் போது 3: 1 என்ற விகிதங்களை தேர்வு செய்யலாம்.

6. பொதுவாக நீங்கள் இந்த கலவையை 2:1 என்ற விகிதத்தில் கலக்கலாம். இதன் பொருள் 1 கப் தினை மற்றும் 1/2 கப் பருப்பு என ஊறவைத்து அரைக்கலாம். இதனுடன் தனியாக ஊற வைத்த வெந்தய விதைகளையும் சேர்த்து அரைக்கலாம்.

7. தினை மாவு அரைக்கும் போது நீங்கள் விரும்பினாலோ அல்லது தேவைப்பட்டாலோ கொஞ்சம் அரிசியையும் சேர்த்து கொள்ளலாம். தோசை மொறு மொறு பதத்திற்கு கிடைக்கும்.

## தினை தோசை



**தேவையான பொருள்கள்:**

தினை - 1 கப்
வெந்தயம் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

தினை மற்றும் வெந்தயம்இரண்டையும் 6 முதல் 8 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

அதன் பிறகு நன்கு தண்ணீர் விட்டு அரைக்க வேண்டும். இதற்கு தினை மற்றும் வெந்தயம் ஊற வைத்த தண்ணீரை பயன்படுத்தலாம்.

நன்றாக மாவு பதத்திற்கு அரைத்த பிறகு அந்த கலவையுடன் உப்பு சேர்த்து சுமார் 12 முதல் 16 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். அப்போதுதான் மாவு நன்றாக புளிக்கும்.

காலநிலையை பொறுத்து நீங்கள் ஊற வைக்கும் நேரத்தை மாற்றிக்கொள்ளலாம்.

உங்களுக்கு பிடிக்கும் என்றால், மாவு கலவையுடன் பொடிப்பொடியாக நறுக்கிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயை சேர்த்துக் கொள்ளலாம். தோசை கட்டாயம் சுவையாக இருக்கும்.

தினை தோசைக்கு ஏற்றவாறு தக்காளி சட்னி அல்லது தேங்காய் சட்னி அரைத்து வைத்து அதனை பரிமாறுங்கள். இதனை தினமும் சாப்பிட்டாலே உடல் ஆரோக்கியம் மேம்படும்.

சிறுகதை

இரா.சிவலிங்கம்

# மூக்குத்தி

மாலை நான்கு மணியிருக்கும் மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. தோட்டத்து ஆத்து கிரவுண்டில் எல்லா சிறுவர்களும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எல்லா துன்பங்களையும், பிரச்சினைகளையும், வேதனைகளையும் மறந்து புட்போல் விளையாடும் இவர்களுக்கு பொழுதுபோக்கே இதுதான்.

வீட்டில் எது இருக்கின்றதோ இல்லையோ ஆனால் விளையாட்டு மட்டும் தினமும் இருக்கும்.

விளையாட்டு மிக உற்சாகமாக சென்றுகொண்டிருந்தது. அப்போது ஆற்றங்கரையில் இருந்து ஒரு குரல் ஒலித்தது. ஏய் தம்பி இங்க வாடா, ஏய் ஒன்னத்தான்டா இங்க வா இது அங்கு விளையாடிக் கொண்டிருக்கும் மனோவின் தாய் மகனைக் கூப்பிடுகின்றாள்.

விளையாட்டு ஆர்வத்தில் மனோவிற்கு காதில் அது விளங்கவில்லை. மனோவின் தாய் தோட்டத்து வேலையை முடித்துவிட்டு வந்து மனோவை ஏதோ அவசரமாக கூப்பிடுகின்றாள்.

ஏம்மா? விளையாடிக்கிட்டுத்தானே இருக்கேன். ஏம்மா? கொஞ்ச நேரம் விளையாடிட்டு வரேம்மா?

ஏய் நீ வரப்போறியா இல்லையா?

தாயின் அதட்டலைக் கேட்டு மனமில்லாமல் ஏதோ முணு முணுத்துக் கொண்டே ஓடிச் சென்றான்.

என்னம்மா சொல்லு நா விளையாடப் போகணும். வீட்டுக்கு வா சொல்றேன். தாயும் மகனும் நடக்கின்றனர்.

ஏய் தம்பி நீ போய் அம்மாயிகிட்ட (மனோவின் அம்மாவின் அம்மா) சல்லி இருந்தா வாங்கிட்டு வா? வீட்டில ஒன்னுமே இல்ல.

நீ என்னம்மா எந்தநாளும் இப்படித்தான் சொல்ற.

போடா தம்பி இப்ப போனாத்தான் ஆறரை மணிக்கு சரி வரமுடியும்.

மனோத்தின் வீட்டிலிருந்து கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடத் தூரம்.

மனோ தண்ணியை மோந்து மடக் மடக்கனு குடித்துவிட்டு அம்மாயி இருக்கும் கல்லுமலை தோட்டத்தை நோக்கி ஓடுகின்றான்.

மனோ ஐந்தாம் வகுப்பு படிக்கின்றான். மெலிந்த உடம்பு, கை, கால், எல்லாம் சூம்பி போய் மிகச் சிறியவனாக காட்சியளிக்கின்றான்.

முகத்தில் மட்டும் ஒரு தெய்வீக களை. வறுமையிலும் முகம் செழிப்பாக இருக்கும். வறுமையின் கோரப்பிடியில் வாழும் மனோவிற்கு ஒரு தங்கை, தகப்பனும், தாயும் தோட்டத்தில் வேலை. ஆனால் அவர்கள் இருவரினதும் வருமானத்தில் மட்டுமே வாழ்க்கை ஓடுகின்றது.

அவர்களின் வருமானத்தில் என்னதான் மிச்சம் பிடித்து வைத்தாலும் சில நாள்கள் பட்டினிதான். அம்மாயிகிட்ட சல்லி வாங்கச் சொல்லுவது இது முதல் தடைவையல்ல. இந்த மாதிரி பல முறைகள் ஓடியிருக்கின்றான்.

வீட்டில் நடக்கத் தொடங்கிய மனோ முனியாண்டி கோயில் வரை சென்று, முணியாண்டி சாமியை கண்டதும், சாமி கடவுளே, இன்னைக்கு எப்படியாவது, சல்லி கடைக்கணும் என்று அந்த பிஞ்சு மனசு வேண்டிக்கொண்டு, அங்கிருந்த மண்ணை நெத்தியில் தொட்டு வைத்துக்கொண்டு, அந்த ஸ்டோர் ஏத்தத்தில் மூச்சு வாங்க அந்த சிறு கால்கள் நடக்கின்றன.


ஏத்தம் முடிந்ததும். மீண்டும் சிறு ஓய்வு, பிறகு நடை இவ்வாறு செல்லும் போது எதிரே கருப்பையா கோயில் அதனையும் வேண்டிக் கொண்டே ஓடுகின்றான். மெதுவாக வானம் இருளத் தொடங்கியது. குடையும் இல்லை. காலில் செருப்பும் இல்லை. அந்தக் கரடு முரடான றோட்டில் ஓட்டமும், நடையுமாக வேர்க்க வேர்க்க எல்லா கடவுள்களையும் வேண்டிக்கொண்டுச் செல்கின்றான்.

அம்மாயி இருக்கும் தோட்டத்திற்கு கிட்டத்தில் வந்தபோது திடீரென மழை பெய்யத் தொடங்கியது. பக்கத்தில் இருந்த எண்ணெய் காம்பிராவில் சற்று ஒதுங்கி நின்றான். கடவுளே மழை விட்றனும் என வேண்டிக்கொண்டே நிற்கின்றான். மழை விட்டப்பாடில்லை. அந்த பிஞ்சு மனம் தன் அம்மா சொன்ன விடயத்தையே திரும்ப திரும்ப நினைக்கின்றது.

வீட்டில் ஒன்னுமில்லடா, இப்ப போனாத்தான் ஆறரை மணிக்காவது வரமுடியும். மனம் ஒரு முடிவுக்கு வந்தவனாய் அந்த மழையைப் பொருட்படுத்தாமல் ஓடுகின்றான். வழியில் போகின்றவர்கள் மனோத்தை பரிதாபமாக பார்ப்பது மனோவிற்குத் தெரிகின்றது.

நனைந்த உடையோடு அம்மாயின் வீட்டை அடைந்த மனோத்தை, அவங்க அம்மாயி கட்டியணைத்து ஏன்டா இப்படி நனைந்து வார, காச்சக் கீச்ச வந்தா என்னடா செய்வது. அம்மாயி ஏசிக் கொண்டே தலையை தன் முந்தானையால் துடைத்து விடுகின்றாள்.

சாப்பிட்டியா? தேத்தண்ணிக் குடிச்சியா? எனக் கேட்டுக் கொண்டே அம்மாயி ஓடிப்போய் லயத்துக் கடையில் ஆட்டுக்கால் இரண்டை வாங்கி வந்து, இந்தா, இத தின்னு நா தேத்தண்ணி ஊத்தித் தாரேன். மனோ ஆட்டுக்காலை வாயில் போட்டு மென்று கொண்டே, அம்மாயி அம்மா வீட்டுல ஒன்னுமே இல்லையென்று சொல்ல சொல்லி சல்லியிருந்தா எவ்வளவு சரி வாங்கிட்டு வரச்சொன்னீச்சு.



நா எங்கடா போவேன். நா என்னா தோட்டத்துல, வேலையா செய்றேன். அந்த டீமேக்கர் அம்மா வீட்டுல வேல செஞ்சா, ஏதாவது கொடுப்பாங்க. ஏன்டா ஒங்க அம்மாவுக்கு சம்பளம் இல்லையா? பகல் என்ன சாப்பீட்டிங்க? பகல் ஒரு இறாத்தல் பாணை நாலு பேரும் சாப்பிட்டோம். இப்படி எத்தன நாளைக்கு இருக்கப் போறிங்கனு எனக்குத் தெரியல.

அம்மாயி தன்னுடைய சுருக்குப் பையில் இருந்த நூறு ரூபாவை கொடுத்து விட்டு, இந்தா இந்த மூக்குத்தியைத் தாறேன் கொண்டு போய் வச்சு ஏதாவது சாமான் வாங்கச் சொல்லு. தேத்தண்ணியைக் குடித்த மனோவிற்கு வாழ்க்கையில் எதையோ சாதித்து விட்டது போல் தோன்றியது. கிடைத்தக் காசையும், மூக்குத்தியையும் சேப்பில் வைத்துக்கொண்டு அம்மாயி நா போயிட்டு வாறேன். கவனமா போய்யா. நா வந்து விட்டுட்டு வரவடா? வேனா அம்மாயி நனையாம இந்தா இந்த கொடய கொண்டு போ.

அம்மாயின் பாசம் அவனை என்னமோ செய்தது. அந்த முடியாத வயதிலும் அம்மாயி உதவுகிறாள். அம்மாயின் தலை மறைந்ததும் மனோ ஓடுகின்றான். மனோ ஓடி வருவதைப் பார்த்த தாய் ஒரு பெருமூச்சு விடுகின்றாள். மனோ கையிலிருந்த காசையும், மூக்குத்தியையும் வாங்கிக் கொண்டு தன் பிள்ளையைப் பார்க்கின்றாள். அதில் ஒரு சோகம் தெரிகின்றது. கால் வலிக்குதாடா? தாயின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென கொட்டியது. மனோ தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

என்னடா செய்றது நாம வாங்கி வந்த வரம். நீ ஏம்மா அழுற மகன் ஆறுதல் சொல்கிறான். தாயும், மகனும் மூக்குத்தியை எடுத்துக் கொண்டு ஈட்டுக் கடைக்குச் செல்கின்றார்கள். ஈட்டுக் கடையில் ஐந்தாறு பேர் நிற்கின்றார்கள். வாம்மா என்ன விடயம் ஈடுவைக்கவா? ஆமாங்க முதலாளி வீட்டுல ஒரு சாமானும் இல்ல அதுக்கு நா என்னம்மா செய்றது. ஏதாவது தங்கச் சாமான் இருந்தா கொண்டு வா காசு தாறேன்.

தன் கையில் பேப்பரில் சுற்றி வைத்திருந்த மூக்குத்தியைக் கொடுக்க என்னம்மா இப்ப மூக்குத்தியெல்லாம் வாங்கிறது இல்லையே. இத போய் கொண்டு வந்திருக்க இது ஒன்னுதாங்க இருந்திச்சு. ஏம்மா இங்க வந்து ஏ உயிர வாங்குறிங்க. என்ன செய்றது. இருக்குறதுதானே கொண்டு வர முடியும்.

மனோ தாயின் முகத்தை பாவமாகப் பார்க்கின்றான். அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிகின்றது. அதனைத் துடைத்துக் கொண்டு அருகில் இருந்த கடையில் அரிசி, மாவு, சீனி,தேங்காய், மரக்கறி, லாம்பெண்ணை, அப்பாவுக்கு வெத்தல பாக்கு வாங்கிக் கொண்டு கையில் இருந்த காசைக் கொடுக்கின்றாள். என்னம்மா மிச்சக் காசுக்கு என்னா செய்றது. சம்பளம் போட்டு மிச்சத்த தாறேங்க.

அதெல்லாம் பொய் இப்ப இங்க இப்படித்தான் சொல்லி வாங்கிட்டுப் போவிங்க அப்புறம் சம்பளம் போட்டதும் கடை பக்கமே வர மாட்டீங்க. எல்லோரிடமும் பேச்சு வாங்கும் அம்மாவைப் பார்த்து மனோவிற்கு அழுகையே வந்து விட்டது. தாய் படும் துன்பத்தை அந்த பிஞ்சு இதயம் தாங்க மறுக்கின்றது. வீடுக்கு வரும் போது இரவு எட்டு மணி. வீடு முழுவதும் இருட்டாக இருந்தது. அப்பா அமைதியாகப் படுத்து இருந்தார். அப்பா வேலைக்கு போவது மட்டும்தான். வீட்டுப் பொறுப்பெல்லாம் அம்மாதான். அவசர அவசரமாக மனோ லாம்பை பத்த வைக்கின்றான்.

அம்மா பசிக்குதம்மா மனோவின் தங்கையின் குரல் கேட்கிறது. கொஞ்சம் பொருமா சாப்பாடு தாறேன். அன்றைய தினம் முடிந்து விட்டது. இனி நாளைய பொழுது? அம்மா இனி நாம இப்படி கஷ்டப்பட வேணாம்மா நம்ம மரக்கறித் தோட்டத்தை செய்வோம். அப்ப நமக்கு கஷ்டம் வராது என்று மனோ தாயின் மடியில் படுத்துக் கொண்டு சொல்வதைக் கேட்டத் தாய்க்கு வாழ்க்கையில் ஒரு புது தெம்பு கிடைக்கின்றது.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# வாழ்க்கை இனிக்கவேண்டுமா?





ப்ரியமதா பயஸ்

வாழ்க்கை என்ற பயணத்தில் நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் ஏராளம். பிறந்தோம், வளர்ந்தோம், இறந்தோம் என்ற சராசரி வாழ்க்கையில் எவ்விதமான தடைகளோ வேதனைகளோ அவமானங்களோ இல்லை.

ஆனால் சாதிக்க நினைக்கும் சரித்திர வாழ்வில் தடைகளும் வலிகளும் அதிகம் தானே. இப்படித் தான் வாழவேண்டுமென்று ஒரு சாராரும் எப்படியாவது வாழலாம் என்று ஒரு சாராரும் வாழ்கின்றனர். இவர்களால் கூட வாழ்ந்து விட இயலும். ஆனால் இப்படியும் அல்லாமல் அப்படியும் அல்லாமல் இருக்கும் இடைப்பட்ட பிரிவினரின் வாழ்க்கையே கடினமானதாக இருக்கிறது.

சுயத்தைத் தொலைத்து விட்டு ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு வாழ்பவர்களின் நிலையோ அடிமை முறையாக உள்ளது. இருக்கிற இடம் தெரியாமல் இருந்து விட்டுப் போகலாம் என்ற மன நிலையினரோ உப்பு சப்பில்லாமல் வாழ்ந்து விட்டுப் போகிறார்கள். இவர்கள் இந்த பூமியில் எந்தச் சுவடையும் விட்டுச் செல்வதில்லை.

### அடுத்தவருக்கு அறிவுரை


பிரச்சினைகளே இல்லாத வாழ்வு வேண்டும் என்று வேண்டுவதை விட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மன நிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நம்மை காயப்படுத்தவும் விமர்சிக்கவும் எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே தான் இருக்கும். பின்னால் பேசுபவர்களுக்கு காது கொடுத்தால் நாம் முன்னே செல்லவே முடியாது. உணவு மனம் சூழல் மூன்றும் சரியாக அமைந்தாலே போதும். வாழ்க்கை அழகானதாக மாறிவிடும். ஆனால் உணவினை நம்மால் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். இந்த மனதையும் சூழலையும் சரியாக அமைத்துக் கொள்வதெப்படி என்பதிலே தான் குழப்பமே உண்டாகிறது.

அடுத்தவருக்கு அறிவுரை கூறும் மனிதர்களால் தனக்கென துன்பங்கள் வரும் போதுஅதனை அவ்வளவு இலகுவாக கடந்து போக முடிவதில்லை. சுய நலம் வஞ்சனை போலியான நட்பு, பொய்யான உறவுகள் இப்படியானவற்றை எதிர் கொள்ளாதவர்கள் யாருமே இல்லை.

### ஞானி ஆன சீடன்

நல்லவை, கெட்டவை கலந்தது தானே வாழ்க்கை. இனிப்பு மட்டுமே இருந்தால் வாழ்க்கை திகட்டி விடும் அல்லவா? ஞானி ஒருவனிடம் சீடனாகச் சேர விரும்பினான் ஒருவன். குரு சொன்னது முதல் 6 மாதங்கள் நீ கவனமற்று இருக்கும் போதெல்லாம் உன்னை நான் அடிப்பேன். நீ தடுக்கும் போது அடிக்க மாட்டேன். அதற்குத் தயாரா என்று கேட்க ஒத்துக் கொள்கிறான். பகலில் கவனமுடன் இருக்கும் அவனால் இரவில் தூங்கும் போது அடி விழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அதற்கான வழிகளை யோசித்தான். முன்பு போலவே தூங்கினான். ஆனால் குரு அறைக்குள் நுழையும் போது அவன் மனம் விழிப்புணர்வை அடைய ஆரம்பித்தது. அவர் வருவதை அவன் உள் மனம் அவனுக்கு உணர்த்தியது. அவன் அடி வாங்குவதில் இருந்து தப்பித்துக் கொண்டான்..குரு சொன்னார். விழிப்புணர்வு அடைந்து விட்டாய். இனி நீ சீடன் இல்லை. நீயே ஞானி என்றாராம். நமக்கும் கூட இத்தகைய விழிப்புணர்வு நிச்சயமாக தேவை.





### மன வலிமை

ஆட்டோ ஒன்றில் வாசகமொன்று எழுதப்பட்டு இருந்தது . வாழத் தான் விடலை. வழியையாவது விடு என்று எழுதப்பட்டிருந்தது. அதனை எழுதியிருந்த மனிதனின் மன நிலையை சற்று யோசித்துப் பார்த்தால் எத்தகைய மன நிலையில் அவன் இருந்திருப்பான் என்பது புரிந்திருக்கும். தயிர்ப்பானைக்குள் விழுந்த இரண்டு தவளைகளில் ஒன்று மேலே ஏறும் போது மற்றொன்று அதனை கீழே இழுப்பதாக ஒரு கதை உண்டு. நாம் முன்னேறும் போது நம்மை கீழே இறக்க ஒரு கூட்டமிருக்கும். உயரே செல்லும் போது நம்மை பலவீனப்படுத்தும் உத்திகளைக் கையாள ஒரு கூட்டம் இருக்கும். எல்லாவற்றையும் கடப்பதற்கு தேவை மன வலிமை. ஆனால் மன வலிக்குள் மூழ்குகிறோம். வாழ்க்கை என்றால் என்னவென்று அறிய நினைத்த ஒருவன் பல தரப்பட்ட மனிதர்களைப் பின் தொடர்கிறான். ஒரு பூங்காவைக் கடக்கும் சிறுவன் தன் அப்பாவிடம் இந்த வாழ்க்கை அழகானது என்கிறான். மருத்துவமனையைக் கடக்கும் நடுத்தர வயதுள்ள ஒருவனோ இந்த வாழ்க்கை துன்பகரமானது என்கிறான். ஆறுதல் சொல்லும் மனிதர்களைக் கண்டவனோ வாழ்க்கை என்பது மனிதர்களால் ஆனதாக கூறுகிறான். காதல் வசப்பட்ட இளைஞனுக்கோ வாழ்க்கை அழ கானதாகத் தெரிகிறது. இறுதியில் தன் தாத்தாவிடம் சென்று கேட்கிறான். வாழ்க்கை என்பது செயல்களால் ஆனது என்கிறார் அவர். ஒருவனது செயல்களே அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன.



### எப்படி வாழ்வது

ஒருவன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதே சிறப்பாகும். நமக்கான பாதையில் தடுமாறாமல் தடம் மாறாமல் வாழ்வதே அழகானது. வாழ்க்கை ஒன்று பார்வைகள் பல விதமாக இருக்கின்றன. வாழ்க்கையை அதன் இயல்பிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். சுற்றுலா செல்லும் மனிதர்களில் சிலரைக் கவனித்திருப்பீர்கள். பயணத்துடனே தங்கள் வீட்டுச் சிந்தனைகளையும் சுமந்து கொண்டே வருவார்கள். சுமைகளோடே தான் மனிதர்கள் பயணிக்கிறார்கள். அதை இறக்கி வைப்பதற்குத் தயாராக இல்லை எவரும். அந்த சுமையை ஏற்பதற்கும் யாரும் தயாராக இல்லை. இறுதிப் பயணத்தில் தன்னை சுமக்கும் நாள் வரை இது தொடரும் போது வாழ்க்கை உற்சாகமாக இல்லாமல் கடினமானதாக இருக்கிறது. உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இறுக்கமான முகத்தோடும் மனதோடும் வாழும் வாழ்க்கையில் என்ன இன்பம் இருந்து விடப் போகிறது? பதற்றத்தோடும் குழப்பத்தோடும் வாழ்க்கையின் பெரும் பான்மை கழிந்து விடுகிறது.

குழந்தையின் மன நிலையில் இருந்தாலே போதும். வாழ்க்கை ரசனையாகும். இன் முகத்தோடு இதயத்தின் கதவுகளைத் திறப்போம். ஒரே ஒரு நாள் பிறருக்காக சிறு உதவி செய்து பாருங்களேன். வாழ்க்கை எத்தனை அர்த்த முள்ளது எனப் புரியும்.

# ரஷ்யா - உக்ரைனில் அமைதியை ஏற்படுத்த திருத்தந்தை முயற்சி!

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

### உலகின் அமைதிக்காக திருத்தந்தை அன்னை மரியாவிடம் விண்ணப்பிக்கிறார்

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை அன்னை மரியாவின் களங்கமில்லா திருஇதயத்திற்கு அர்ப்பணிப்பது நம் அனைவரையும் தனிப்பட்ட சமுதாய மற்றும் திருஅவை அளவில் தீவிர மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது என திருப்பீடத்தின் மனச்சான்று பேராயத்தின் தலைவர் கர்தினால் மவ்ரோ பியாச்சென்சா அவர்கள் தெரிவித்தார்.

ஒவ்வொருவரின் அக அமைதி மற்றும் மனச்சான்றில் உருவாகும் அமைதி இறைத்தந்தையின் அன்பு அரவணைப்பில் மட்டுமே நம் தனிப்பட்ட பாவங்கள் மற்றும் குற்றங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற விழிப்புணர்வில் இறை இரக்கத்தைச் சார்ந்து இருப்பதால் கிடைப்பதாகும். நீதியின்றி அமைதி இல்லை, இரக்கமின்றி அமைதி கிடையாது, அமைதிக்கும் இரக்கத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு கடவுளின் திட்டத்தில் ஆழமாக வேரூன்றியதாகும்.

அர்ப்பணிப்பு இறைவேண்டலின் பலனை மனிதக் கண்ணோட்டத்தால் அளவிட முடியாது எனினும் இது ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே இடம்பெற்று வரும் போரால் உருவாகியுள்ள பதற்ற நிலைகளுக்குத் தீர்வு கிடைக்க உதவும் என்றார்.

### திருத்தந்தையின் சந்திப்புக்கள்

நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள் ஆர்ஜென்டீனா நாட்டு புவனோஸ் அய்ரஸ் நகரின் மனித முன்னேற்றத் துறை அமைச்சர் ஸ்பெயின் நாட்டு இயேசு சபையினரின் பெற்றோர் கழக உறுப்பினர்கள் ஆகியோரையும் 25 மார்ச் 2020 அன்று திருப்பீடத்தில் தனித்தனியே சந்தித்துப் பேசினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அவர் உக்ரைனில் நடைபெற்று வரும் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையின் அவசரத்தை வலியுறுத்தியுள்ளார். பாசோஸ்கூரோவில் ஒரு புதிய நோய்த்தடுப்பு சிகிச்சை மையத்தின் திறப்பு விழாவின்போது உக்ரைனில் நடைபெறும் மோதலுக்கான பேச்சுவார்த்தையின் அவசரத்தை வலியுறுத்தியமையோடு நடுநிலை வகிக்கும் செயல்முறைக்குப் பங்களிக்க திருப்பீடம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



இத்திறப்பு விழாவின்போது செய்தியாளர்களிடம் பேசிய கர்தினால் பரோலின் அவர்கள் உக்ரேனிய குழந்தைகளை இத்தாலிக்கு அழைத்து வந்துள்ள இச்சூழ்நிலை உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் போருக்கான விலையை செலுத்துவது மக்களே, அதிலும் குறிப்பாக பலவீனமான மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களே என்றும் தன் வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் இந்தப் போர் ஒரு படுகொலை என்று கண்டனம் தெரிவித்த கர்தினால் பரோலின் அவர்கள், இந்தப் போர் நிச்சயம் ஒரு முடிவுக்கு வரும் என்று தான் நம்புகிறேன் எனவும் முதலில் போரை நிறுத்துவதில் நாம் வெற்றி பெறுவோம், பின்னர் ஒரு தீர்வுக்கு வழிவகுக்கும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவோம் எனவும் கூறினார்.

திருத்தந்தை தற்போது சுமூகமான பேச்சுவார்த்தை ஒன்றை வலியுறுத்துகிறார் என்றும், இரண்டு குழுக்களுக்கிடையே இடைநிலையாளராக இருந்து பேச்சு



வார்த்தை வழியாகப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் திருப்பீடம் எப்போதும் உதவத் தயாராக இருக்கின்றது எனவும் கர்தினால் பரோலின் தெரிவித்தார்.

### உக்ரைனில் அமைதி நிலவ கிறிஸ்தவர்கள் செபம்

இரண்டு நாள் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் உலகில் - குறிப்பாக உக்ரைன் நாட்டில் - அமைதி நிலவச் செபித்தனர். மற்றும் இந்த அமைப்புக்களின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுக்கு வருங்காலத் திட்டங்களையும் வகுத்தனர்

உக்ரைனை ஆக்கிரமித்து ரஷ்யா நடத்திவரும் போருக்கு அஞ்சி புலம்பெயரும் உக்ரைனியர்களுக்கு உதவுகின்ற ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளில் ஒன்றான சுலோவாக்கியாவில் அண்மையில் தான் மேற்கொண்ட பயணம் குறித்த தன் சிந்தனைகளை இத்தாலிய தினத்தாளில் பதிவுசெய்துள்ளார் கர்தினால் மைக்கிள் செர்னி.

சுலோவாக்கியா நாட்டின் பிராட்டிஸ்லாவாவில் இம்மாதம் 17ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெற்ற, மூன்றாவது ஐரோப்பிய கத்தோலிக்க சமுதாய நாள்கள் என்ற கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்ற ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் இடைக்காலத் தலைவரான கர்தினால் செர்னி அவர்கள், அந்நாட்டு அரசுத்தலைவர் அவர்களையும் பிரதமர் அவர்களையும் சந்தித்துள்ளார். மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை சுலோவாக்கியா நாட்டில் இருந்து அந்நாட்டினர் வரவேற்று உதவுகின்ற உக்ரைன் நாட்டுப் புலம்பெயர்ந்தோர் மற்றும் அந்நாட்டுத் தன்னார்வலர்களையும் சந்தித்துள்ளார் கர்தினால் செர்னி.

### வேற்றுடையில் உள்ள வானதூதர்கள்

துன்பத்தை எதிர்கொள்ளும் அந்நிய நாட்டவர்க்கு சிறப்பாகப் பணியாற்றுகின்றவர்களை வேற்றுடையில் உள்ள வானதூதர்கள் என பலநேரங்களில் நாம் அழைக்கின்றோம். இவ்வாறு உதவுகின்றவர்கள் பலநேரங்களில் அறியப்படாதவர்களாக உள்ளனர். இருபால் துறவியர், திருமணமாகாத அருள்பணியாளர்கள், ஆயர்கள் மற்றும் ஏராளமான பொது நிலையினர் ஆகியோர் துயருறும் இம்மக்களுக்கு உதவி வருகின்றனர் எனவும் கர்தினால் செர்னி அவர்கள் எழுதியுள்ளார்.

இவ்வாறு உதவுகின்றவர்கள் உண்மையிலேயே வானதூதர்கள். அவர்கள் மட்டுமல்லர். தேவையில் இருப்போரும் வான்தூதர்கள் என்ற பரந்த கண்ணோட்டத்தோடு நாம் நோக்கவேண்டும் என திருவிவிலியம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது என்றும் இயேசு சபை கர்தினால் செர்னி அவர்கள் பதிவுசெய்துள்ளார்.

### உக்ரைனியர்களுக்கு பேருதவி வழங்கும் போலந்து ஆயர்களுக்கு நன்றி

உக்ரைனில் போர் தொடங்கியதிலிருந்து போலந்து நாடு இதுவரை ஏறத்தாழ 23 லட்சம் உக்ரைனியர்களை வரவேற்று ஆதரவளித்து வருகிறது.

தவக்காலம் மனமாற்றத்திற்கும் மனத்தின் போக்கை மாற்றுவதற்கும் அழைப்புவிடுக்கின்றது என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் பக்கத்தில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மனத்தின் போக்கை மாற்றுவதன் வழியாக வாழ்வின் உண்மையும் அழகும் பொருள்களைக் கொண்டிருப்பதிலும் சேமித்துவைப்பதிலும் அல்ல மாறாக கொடுப்பதிலும் நன்மைத்தனத்தைப் பகிர்ந்துகொள்வதிலும் இருக்கின்றன என கடுமையான போர் இடம்பெற்றுவரும் உக்ரைன் நாட்டிலிருந்து புலம்பெயரும் மக்களுக்கு உதவி வருகின்ற போலந்து ஆயர்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

போலந்து ஆயர் பேரவைத் தலைவர் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை திருப்பீடத்தில் தனியே சந்தித்து ஏறத்தாழ 45 நிமிடங்கள் உரையாடியபோது உக்ரைனில் தொடர்ந்து போர் இடம்பெற்றுவரும் சூழலில் போலந்து திருஅவை செயல்படும் முறைகளை விளக்கினார். உக்ரைனில் போர் தொடங்கியதிலிருந்து போலந்து நாடு இதுவரை ஏறத்தாழ 23 லட்சம் உக்ரைனியர்களை வரவேற்று ஆதரவளித்து வருகிறது.

### புலம்பெயர்ந்தோருடன் முதுபெரும்தந்தை சந்திப்பு

கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும்தந்தை முதலாம் பர்த்தலோமேயு அவர்கள் உக்ரேனிய மக்களுக்குத் தனது ஒன்றிப்பைத் தெரிவித்தமையுடன் புலம்பெயர்ந்தோரை வரவேற்கும் போலந்து மக்களுக்கும் நன்றி கூறினார்.

உக்ரைனியப் புலம்பெயர்ந்தோரை வரவேற்கும் போலந்து நாட்டு மக்களின் தாராள மனதிற்கும் உபசரிப்பிற்கும் நன்றி தெரிவித்த முதுபெரும்தந்தை பர்த்தலோமேயு அவர்கள் உங்களின் இந்தச் செயல்களுக்கு ஒட்டுமொத்த உலகமும் நன்றி கடன்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

உக்ரைன் மக்களுடன் தனது ஒன்றிப்பை வெளிப்படுத்திய முதுபெரும்தந்தை அவர்களுக்கு தனது சார்பாக நன்றி தெரிவித்த போலந்து பேராயர் அனைத்துத் தலத் திருஅவையினரையும் பல்வேறு மதங்களின் தலைவர்களையும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களையும் இந்தப் போர் முடிவுக்கு வர இறைவேண்டல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

### உக்ரைன் சென்றது திருத்தந்தை வழங்கிய மருத்துவ அவசர மருத்துவ ஊர்தி

உக்ரைனில் நடந்துவரும் போரில் காயமடைந்த குழந்தைகளுக்காகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நன்கொடையாக வழங்கிய மருத்துவ அவசர ஊர்தியை உக்ரேனிய அதிகாரிகளிடம் வழங்கினார் கர்தினால்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்



போரினால் பெரும் துன்பங்களை அடைந்துவரும் உக்ரேனிய மக்களுக்குத் தனது நெருக்கம் ஆதரவு மற்றும் உதவி ஆகியவற்றின் உறுதியான அடையாளமாக திருத்தந்தை வழங்கிய மருத்துவ அவசர ஊர்தி ஒன்றைக் கொண்டு சென்றார் திருத்தந்தையின் தர்மச்செயல்களுக்குப் பொறுப்பான கர்தினால்.

"உக்ரைனுக்குத் திருத்தந்தை கொடையாக வழங்கிய இந்த மருத்துவ அவசர ஊர்தியை அவரின் சார்பாக ஒப்படைப்பது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். மனித உயிர்களைக் காப்பாற்றப் பயன்படும் இந்த ஊர்தி ஒரு குறியீட்டு மதிப்பைப் பெற்றுள்ளது." - என்றார் அவர்.

திருத்தந்தை எப்போதும் உறவு பாலங்களைக் கட்டுபவர், அமைதியைக் கொண்டு வருபவர் என்றும் இந்த மருத்துவ அவசர ஊர்தி குறிப்பாகத் துன்பப்படும் மக்களை அரவணைக்கும் திருத்தந்தையின் அடையாளமாக உள்ளது என்றும் கூறிய கர்தினால், நான் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறேன், நான் உங்களுடன் துயரப்படுகிறேன், மிகுந்த சிரமத்தில் இருக்கும் இந்த நாட்டிற்கு அமைதியைக் கேட்கிறேன், அதற்காக இறைஞ்சுகிறேன் என்று கூறும் திருத்தந்தையின் அடையாளமாகவே இந்த ஊர்தி உள்ளது என்றும் எடுத்துரைத்தார்.

திருத்தந்தை வழங்கிய இந்த மருத்துவ அவசர ஊர்தியைப் பெற்றுக்கொண்ட உக்ரேனிய அதிகாரிகளில் ஒருவர் திருத்தந்தையின் அன்பிற்கும் செபத்திற்கும் நிறைந்த உள்ளத்துடன் நன்றி தெரிவித்தமையுடன் இவ்வூர்தி புலம்பெயர்ந்து வரும் மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது என்று கூறினார் எனவும் தெரிவித்தார்.

# மண்ணின் மணமாய் படிக்கம்

## விமர்சனம்




தமிழில் எழுதப்படும் இலக்கிய புனைவுகள் யதார்த்தம், மீயதார்த்தம் போன்ற போக்குகளை தழுவியதாக எழுதப்படுவதனை நாம் காண்கிறோம். படைப்புக்களின் நில அமைப்பியல் கூறுகளை அவதானிக்கையில் அவை படைப்பாளியின் சொந்த நிலம் சார்ந்தோ அல்லது படைப்பாளிக்கு அந்நியமான நிலப்பரப்பு குறித்தோ அமைவதனை காணலாம். சிறுகதை, நாவல் போன்ற புதினங்கள் நிலப்பரப்பினை தழுவியே எழுதப்படுகின்றன. சில புதினங்களை வாசிக்கையில் பொதுவாக எந்த நிலப்பரப்பினை மையமாக வைத்து கதையாடல் நகர்கிறது என்பதை ஊகிக்க முடியாது இருக்கும் அல்லது படைப்பில் வருகின்ற நிலப்பரப்பு எல்லா நிலத்துக்கும் பொருந்தக்கூடிய வகையில் கதையாடல் நகர்ந்திருக்கும். எவ்வாறாயினும் நிலப்பரப்பு ஒன்றினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டாது படைப்பு ஒன்று எழுவதில்லை எனக்கூறிவிட முடியும்.

எழுத்தாளர் ஆ.தங்கராசா அவர்கள் மட்டக்களப்பு ஆரையம்பதியில் வசித்து வருபவர். பல வருடங்களாக சிறுகதை எழுதி வரும் எழுத்தாளர். தாயதி பதிப்பகத்தின் வெளியீடாக இவரின் படிக்கம் சிறுகதை தொகுதி வெளியாகியுள்ளது. மொத்தமாக பதினாறு சிறுகதைகள் இந்த புத்தகத்தில் இருக்கின்றன. இந்த கதைகளில் பெரும்பாலானவை தான் வாழும் பிரதேசம் குறித்து எழுந்த கதையாடல்களே. அந்த வகையில் பார்க்கையில் இந்த தொகுதி நிலம் சார்ந்த அழகியல் கூறுகளை அதிகம் கொண்ட தொகுதியாக இருக்கிறது.

ஒரு நல்ல தொகுதிக்கு பெயர் அமைவதும் கலைத்துவமாய் காணக்கூடியதாக இருப்பது சில தொகுதிகளில் தான். அந்த வகையில் இந்த தொகுதிக்கு படிக்கம் என பெயர் சூட்டப்பட்டிருப்பதும் பல்வேறு சிந்தனைகளை கிளறி விடுகிறது. படிகம் என்பது வெற்றிலை குதப்பி துப்பி விடுவதற்காக பாவிக்கப்படும் பாத்திரமாகும். இது பொதுவாக வெண்கலத்திலேயே காணக்கிடைக்கும் ஒரு பாத்திரம். ஏன் இவ்வாறு ஒன்றை தேர்வு செய்தனர் என சிந்திக்கையில் புலப்படுவதாவது, பொதுவாகவே சமூகத்தில் கழிக்கப்படும் ஒன்றை முன்னிறுத்துவதனூடே கதைசொல்லியானவர் விளிம்பு நிலை கதையாடல்களை முன்னிறுத்துகிறார் எனலாம். அதற்கேற்றாற்போல் இதில் காணப்படும் கதைகள் அனைத்துமே நலிந்த மக்கள் தொடர்பிலானவைகளே.

இந்தத் தொகுதியிலே துறைக்காறன் கதையானது ஆற்றிலே வள்ளம் விடும் ஒருத்தனின் கதையாகும். துறை எனப்படும் சொல் விசேடமாக மட்டக்களப்பு பகுதிக்கேயுரிய சொல்லாடலாகும். எழுவான்கரையினையும் படுவான்கரையினையும் ஊடறுத்துச் செல்கின்ற மட்டக்களப்பு வாவியினூடே மக்கள் பயணிப்பதற்காக வள் ளங்களை நிறுத்தி வைக்கும் இடமே துறையாகும். அக் காலத்திலே மண்முனை துறை, அம்பிளாந்துறை துறை, களுதாவளை துறை மற்றும் மண்டூர் துறை என்பன பிரபலமான துறைகளாக விளங்கின. தற்போது பாலங்கள் அமைக்கப்பட்டமையால் அநேகமான துறைகள் வழக் கொழிந்து ஓரிரு துறைகளே இயக்கத்தில் இருக்கின்றன. செம்பாப்போடி என்ற பாத்திரத்தினூடே மட்டக்களப்பு துறைகளின் வாழ்வியல் கோலங்களை விளக்குவதாக இந்த கதை அமைந்துள்ளது.

தீர்த்தக்கரையினிலே கதையானது மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தத்திற்கு செல்லும் நினைவுகளை பகருகின்ற ஒரு சிறுகதையாகும். இந்த தீர்த்தக்கரை என்ற சொல்லாடல் கூட மட்டக்களப்பிற்கே உரிய தனித்துவமான பதமே. பாரதியார் தீர்த்தக்கரை என்ற சொல்லை எந்த அர்த்தத்தில் பாவித்தாரோ தெரியவில்லை ஆனால் மட்டக்களப்பில் தீர்த்தக்கரை என்பது அமிர்தகழி தீர்த்தத்தினையே குறிக்கும். நினைவிடை தோயும்' இந்த கதையினிலே பல்வேறு நிலக்கூறுகளும் கொண்டாட்டங்களும் நினைவு கூரப்படுவது குறிப்பிடத்தக்கது தேர்வு செய்த பாத்திரங்களினூடே ஒரு காலத்தின் சமூக அமைப்பும் அதன் பாரம்பரியங்களும் நினைவு கூரப்படுதலினை இந்த கதையில் காணலாம்.

'உப்புக்கரைச்சை' சிறுகதையானது எண்பதுகளின் நடுப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைகளின் அனர்த்தங்களை பதிவு செய்கிறது. கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் நிகழ்ந்த வன்முறைகளில் தனது குடும்பத்தை இழந்த சாமான்யன் ஒருவனின் கதையே இது. இது இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட ஒரு தனி மனிதனின் கதையல்ல. மாறாக ஒரு காலத்தில் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கதையாக அமைகிறது.

ஒட்டிக்கூடு கதையானது மட்டக்களப்பு வாவியை நம்பி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் பாடுகளை பேசுகின்ற கதையாகும். இதில் பிரதான பாத்திரங்களாக இரு மீனவர்களை முன்னிறுத்தி அவர்களின் பார்வையினூடே மீனவர்களின் வாழ்வியல் முறை அலசப்படுகிறது. இந்த கதையில் மீனவர்களின் மீன்பிடி முறைகள் மற்றும் அதற்காக அவர்கள் பயன்படுத்தி வருகின்ற உத்திகளும் கூறப்படுகின்றது.

புதிர் கதையானது விவசாயிகள் அறுவடை முடிந்ததும் கொண்டாடுகின்ற புத்தரிசி சமைத்து உண்கிற பாரம்பரியத்தை கூறுகின்ற கதையாகிறது. இந்த நாள்களில் இந்த மாதிரியான அழகியல் கூறுகள் நமது வாழ்வியலில் அற்றுப்போய் விட்டமை துயரமே.

ஆரையம்பதி ஆ.தங்கராசா என்ற மூத்த எழுத்தாளரின் சிறுகதைகள் மண்வாசனையோடு கலந்தவையாக உள்ள அவரது சொந்த மண்ணின் கதைகளாக வாசகர்கள் மனதில் தடம் பதிக்கின்றன.

## மௌனத்தின் தேடல்

கரையற்று நீந்துகின்றது என் துயர்
என் ஞாபகப்பந்தலில்
வழிப்போக்கர்களாய்
வந்தவர்கள் யார் யாரோ
திரும்பிப்பார்த்தவன்
நீ மட்டுமே
காலப்புதையலுக்குள்
கண்ணீரால் புதைந்த
என் கனவுகளுக்கும்
மொழியுண்டு என்பதைக்
கண்டறிந்தாய்

உள்ளத்தில் அணைபோட்டு
தடுத்துவைத்த நேசம்

பலமுறை
விவாதத்தின் பின்
ஒரேயொரு சொல்லில்
விதியானது
எனக்கு நீயென்று

இன்று
முடிச்சுகளற்ற
உன் பேச்சில்
தெளிவற்றுப்போகிறேன்....
அறிவாயா வழிப்போக்கனே
நான் மன்றாடியது
ஒரு மாலைக்காக

ஏ.ஜீ.சபீனா - திருகோணமலை

# கனவுக் கதிர்



## இன்றைய பெண்கள்

இரும்புச் சிறையுடைத்து
அரும்பிய கனவுகளை
நனவாக்கி இன்று
விரும்பிய தொழிலுடன்
விஞ்ஞான வளர்ச்சியுடன்
அஞ்ஞான இருள் நீங்கி
விட்டில்கள் நாமும்
விடியல்கள் என்றே
எட்டுத் திசையகளும்
உரக்கின்றன அவள் குரல்கள்

பாரதிக்கும் பரிசளித்தாள்
மடமைகள் தகர்த்து
பார்வையால் துகிலுரியும்
பாருதித்த மாந்தருக்கு
கண்களால் தீ பாய்ச்சி
தீயெண்ணம் கருக்குகின்றாள்
எனக்கு நானே
வேலியென்று சுயத்தாழ்கள்
பல அணிந்தே
பிரசினங்கள் தீண்டாது
காவல்கள் காக்கின்றாள்
விதியென்று முடங்கி
முயற்சிகளை முடக்காது
வழிகள் பல உண்டென
விழித்தெழுந்து
உயர்ந்திட்டால்
பழிகள் கண்டும்
நாணற் புல்லாகாது
வீறுடன் மூங்கிலாய்
நேருறு பாதையில்
வீறு நடை போடுகின்றாள்

இன்னும் வளர வேண்டும்
இன்னல்கள் நீக்க வேண்டும்
வறுமை ஒழிக்க வேண்டும்
உலகே வாழ்த்த வேண்டும்

புதுயுகத்தின்
புரட்சிப்பெண்ணே...
சாதிக்கப் பல உண்டு
சோர்ந்து நீ போகாதே...

சுகதா - கிளிநொச்சி

## கவிதைக்கோர் மகுடம்

எண்ணப் போக்கை மனதில் வரைந்து
எழுத்துக் கோர்வைகள் தாளில் நடந்து
எதையோ நினைத்து அதையே புனைந்து
ஏட்டில் எழுதும் சொற்களின் சுவையோ?

உள்ளக் கிடக்கை உணர்த்தும் பொருளை
உருகும் நொடியில் படியும் கனவை
உள்ளது போலவே சொல்லும் திறனோ!
உண்மை மறைத்து உரைப்பதும் சரியோ?

கற்பனைக் கருவில் முளைத்த சிசுவாய்
கணத்தில் உதிக்கும் அறிவின் தெளிவோ!
கண்டதை விளக்கும் காட்சிப் படிமமோ?
கவிதை என்பதை எவ்விதம் சொல்வதோ?

சம்பூர் சமரன்

# இளம் ஊடகர் அனுருத்த பண்டார மோதர பொலிஸ் நிலையத்தில்?

கடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகிய நிலையில், பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் அனுருத்த பண்டார, மோதர பொலிஸ் குற்ற விசாரணை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு மோதரை பொலிஸார் அறிவித்துள்ளது. இதனை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் சிலர் பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர்.

இளம் ஊடகவியலாளரும் சமூக ஊடக பதிவாளருமான அநுருத்த பண்டார, அரசாங்கத்துக்கு எதிரான முகநூல் பக்கத்தின் நிர்வாகியாக செயற்பட்டார் எனக் கூறப்படுகிறது.

மோதரை பொலிஸில் இருந்து சென்றதாகக் கூறிக்கொள்ளும் குழுவால் வெள்ளிக்கிழமை இரவு அவர் கடத்தப்பட்டார் என சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

ஆனாலும் மோதரை காவல் நிலையத்தில் அவ்வாறான ஒருவர் இல்லை என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர் எனத் தகவல் வெளியாகியது. இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

இவ்வாறான சூழலில் தற்போது அவர் மோதர பொலிஸ் குற்ற விசாரணை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தலவாக்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை 6 மணி முதல் நாளை காலை 6 மணி வரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவை அரசு அறிவித்துள்ள நிலையில், இந்தப் பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என அவர் துணிச்சலான அறிவிப்பை வெளியிட்டார் என நேற்றிரவு செய்திகள் வெளியாகின.

கூட்டம் கூடும் உரிமையும், கருத்து கூறும் உரிமையும் எங்களுக்கு உண்டு. அதில் கைவைக்க முயல வேண்டாம் என அரசுக்கு நாம் கூறி வைக்க விரும்புகிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கூட்டம் கூடும் உரிமை, கருத்துக் கூறும் உரிமை ஆகிய உரிமைகளை, பொது ஒழுங்குக்குக் குந்தகம் விளைவிக்காத முறையில் அனுபவிக்க, பயன்படுத்த, பிரயோகிக்க ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமையை அரசமைப்பு உறுதி செய்துள்ளது. அந்த உரிமைகளைப் பாதுகாக்க, முன்னெடுக்க, மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடமையும், உரிமையும் இருக்கின்றன என்பதை அரசாங்கமும்,பொலிஸ் மா அதிபரும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாடு முழுக்க சுயேச்சை குழுக்களால் நாளை (இன்று ஞாயிறு) நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு நிகழ்வுகளுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் தொடர்பில்லை. அவை கட்சி சார்பற்ற முறையில் பொதுமக்கள் குழுக்களால் நடத்தப்படும் நிகழ்வுகள். அவை சிறப்பாக நடைபெற நாம் வாழ்த்துகிறோம்.

எமது பேரணி இரண்டு வாரங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டதாகும். அது நாளை(இன்று) ஞாயிற்றுக்கிழமை 3 ஆம் திகதி ஒரு மணி முதல் தலவாக்கலையில் திட்டமிட்டபடி நடக்கும். பொதுமக்கள் பாதுகாப்பு விதிகளை பயன்படுத்தி ஜனநாயக உரிமைகளை முடக்க அரசாங்கம் முயலக்கூடாது. சட்டம், ஒழுங்குக்கு முரணற்ற முறையில் எமது அரச எதிர்ப்பு பேரணி நடைபெறும். ஜனநாயகத்துடன் விளையாட வேண்டாம் என அரசுக்கும், பொலிஸுக்கும் கூறி வைக்க விரும்புகிறோம். - என்றார்.

## மின்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது ஆக, 1 மணி 40 நிமிடங்கள் மாத்திரமே அமுல்படுத்தப்படும் என நேற்றிரவு தெரிவிக்கப் பட்டது..

தேவையான எரிபொருள் கிடைத்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட மின்வெட்டு காரணமாக ஏப்ரல் 04ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பாடசாலை விடுமுறையை பிரகடனப்படுத்துமாறு கல்வி அமைச்சுக்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

எனினும், ஏப்ரல் 9 - 17 வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டங்களுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாமல் அரசு ஊரடங்கைப் பிறப்பித்துருப்பதாகக் கூறப்படுகின்றது.

## அடங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்கு வரத்து சேவைகளும் தடைப்பட்டன.

இதேநேரம் ஊரடங்கு அறிவித்தலையடுத்து 6 மணியையும் தாண்டி மதுபான சாலைகளிலேயே வரிசைகள் காணப்பட்டபோதும் விரைவில் அவையும் காணாமல் போயின.

## கொழும்பில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவற்றைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் கரிசனை காட்டவில்லை.

அதேநேரம் முன்னிரவு சமயத்திலும் தென்னிலங்கையில் பல இடங்களிலும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என ஆங்காங்கே இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஆயினும் நள்ளிரவில் பல இடங்களும் முழுமையாக வெறிச்சோடின. ஆர்ப்பாட்டங்களும் மெல்ல நலிந்து செயலிழந்தன.

இன்று சுயேச்சையாக மக்கள் அறிவித்திருந்த - வீதிக்குக் கூடும் - போராட்டங்கள் ஊரடங்கு உத்தரவு காரணமாக இடம் பெறுமா என்பது தெரியவில்லை.

## இன்று ஒன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, நேற்று (02) மாலை 6 மணி முதல் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அதிகாலை 6 மணி வரை எந்தவொரு நபரும் பொது வீதிகள், ரயில் மார்க்கங்கள், பொது பூங்காக்கள், பொது விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது நிலப் பரப்பு அல்லது கரையோர பகுதிகளுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களுக்கு செல்வதற்கு ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அல்லது பொலிஸ் மாஅதிபர் ஆகிய தரப்புக்களினால் அதிகாரம் வழங்கப்படும் அதிகாரியின் ஊடாக விநியோகிக்கப்படும் ஆவணத்தை பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அமைதியை பாதுகாத்துக்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 16 ஆவது சரத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே இந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் வெளியிடப்படுவதாக அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் ஊரடங்கு சமயத்தில் 'பார்'முன் வாள்வெட்டு; மூவர் காயம்



வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மதுபான சாலைக்கு முன்பாக ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.

மதுபானசாலை மூடியதன் பின்னர் அதற்கு முன்னால் மூவருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது ஓர் நபர் தனது மோட்டார் சைக்கிலில் வைத்திருந்த மரம் அறுக்கும் வாள் மூலம் மற்றைய இருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு அவ்விடத்திலிருந்து செல்ல முற்பட்ட போது, மற்றைய இருவரும் இணைந்து அவரின் வாளைப் பறித்து அவர் மீதும் வாள் மற்றும் கற்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த நபர் அங்கிருந்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் மற்றைய இருவரும் அவ்விடத்திலிருந்து வாள்களுடன் வெளியேறி சென்றனர். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஒரு தொகை அரிசி அடுத்தவாரம் வருகை

இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் ஒருதொகை அரிசி அடுத்தவாரம் நாட்டை வந்தடையவுள்ளது.

வர்த்தகத்துறை அமைச்சு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, முதலாவது கட்ட அரிசி தொகை இவ்வாறு நாட்டை வந்தடையும் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுமார் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அளவான நாடு, சம்பா, வெள்ளை அரிசி ஆகிய அரிசி வகைகள் நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளன.

அவற்றை உடனடியாக மக்களுக்கு சலுகை விலையில், விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# 40 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான டீசல் தாங்கிய கப்பல் நாட்டினை வந்தடைந்தது!

இந்திய கடன் வசதியின் கீழ், 40 ஆயிரம் மெற்றிக் தொன் அளவிலான டீசல் தாங்கிய கப்பலொன்று நாட்டை வந்தடைந்தது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

மேற்படி கப்பலில் இருந்து எரிபொருள் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 150 இற்கும் மேற்பட்டவர்களிடம் ஆர்ப்பாட்டம் குறித்து வாக்குமூலம்

நுகேகொடை, மிரிஹான பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் இதுவரை 150 இற்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைகளத்தால் இவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக விசாரணை நடவடிக்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதே நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு!

## கர்த்தினால் வலியுறுத்து

இலங்கையின் அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வதே நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு எனவும், தனிமனிதர்களை மாற்றுவதால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

மேலும் உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களை அகற்றுவது தீர்வாக அமையாது, அது பயனுள்ள விடயமல்ல என்பது நிரூபணமாகிவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தனிநபரிடம் அதிகாரம் அனைத்தையும் குவிக்கின்ற அமைப்பு முறையை மாற்றவேண்டும் என தெரிவித்துள்ள அவர், உயர் பதவியில் உள்ளவர்களுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிப்பதை மாற்றவேண்டும் என வும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உறவினர்களையும் சகாக்களையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதோடு, நிபுணர்களின் ஆலோசனைக்கு ஏற்ப அரசநிறுவனங்களில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு இந்தியா படைகளை அனுப்புமென்ற செய்தி போலியானது

## இந்திய தூதரகம் மறுப்பு

இலங்கைக்கு இந்தியா தனது படைகளை அனுப்புவதாக சில ஊடகங்களில் வெளியாகியிருக்கும் தகவல்கள் முற்றிலும் ஆதாரமற்ற அறிக்கை என இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம் கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வாறான பொறுப்புணர்வற்ற அறிக்கைகளை தூதரகம் கண்டிக்கும் அதேநேரம் சம்பந்தப் பட்ட தரப்பினர் வதந்திகளைப் பரப்பு வதை தவிர்க்க வேண்டு மெனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

# வாகரையில் யுவதி மர்ம மரணம்; சகோதரியின் கணவர் கைது!

மட்டக்களப்பு – வாகரை பனிச்சங்கேணி பிரதேசத்தில் 18 வயதுடைய யுவதி ஒருவர் மர்மாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த யுவதியின் சகோதரியின் கணவர் கடந்த வியாழக்கிழமை பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பனிச்சங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது யுவதியான யோகராசா திரிா என்பவரே கடந்த 29 ஆம் திகதி இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளர்.

யுவதியின் தாய், தந்தை பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில், தாயார் வேலைவாய்ப்பை பெற்று வெளிநாடு சென்றுள்ளார். திருமணம் முடித்து வாழ்ந்து வரும் தனது இரண்டாவது சகோதரியுடன் இருந்து யுவதி கல்வி கற்று வருகின்றார்.

சம்பவதினமான கடந்த 28ஆம் திகதி மாலை 7 மணியளவில் யுவதியைப் படிக்குமாறு அவரது சகோதரி தெரிவித்துவிட்டு, தனது கணவனுடன் அந்த பிரதேசத்திலுள்ள தனது மூத்த அக்காவின் வீட்டிற்கு பட்டா ரக வாகனத்தில் கணவருடன் சென்றிருக்கின்றார். அங்கு கணவரோ தாம் மீன்பிடிக்க கடலுக்கு செல்கிறார் என மனைவியிடம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து மீண்டும் தனது வீட்டிற்குத் திரும்பியுள்ளார்.

இதனையடுத்து வீட்டில் தனிமையில் இருந்து கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்ட யுவதி, தன்னையும் தனது மூத்த அக்கா வீட்டில் கொண்டு சென்று விடுமாறு தெரிவித்த நிலையில், 7.30 மணியளவில் அவரையும் அதே வானத்தில் ஏற்றிக் கொண்டு சென்று சுமார் 5 நிமிடத்தில் மீண்டும் குறித்த யுவதியை சடலமாக வாகனத்தில் வீட்டுக்கு கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறு சடலமாக கொண்டு வரப்பட்ட யுவதியின் ஆடைகளிலும் அவரது ஆடைகளிலும் இரத்தக் கறை இருப்பதை கண்டு ஆடைகளைக் கழற்றி, வேறு ஆடைகளை அணிவித்து, அறையிலுள்ள கட்டிலில் நித்திரையில் இருக்கும்படி சடலத்தை ஒழுங்கு படுத்தி விட்டு மின்விசிறியை இயங்கவைத்துவிட்டு இரத்தக்கறையுடன் கழற்றப்பட்ட தனதும் மற்றும் உயிரிழந்த யுவதியின் ஆடைகளையும் ஒளித்து வைத்துள்ளார்.

அதனை தொடர்ந்து வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரீவி கமராவின் வன்தட்டை (ஹார்ட் டிஸ்க்) கழற்றி அதனை ஒளித்து வைத்து விட்டு இரவு 11 மணியளவில் மனைவியைக் கொண்டு சென்று விட்டுவிட்டு வந்த மனைவியின் சகோதரி வீட்டிற்குச் சென்று மனைவியை அங்கிருந்து கூட்டிக் கொண்டு வீடு திரும்பினார். மைத்துனி நித்திரையில் இருப்பதாக மனைவியிடம் தெரிவித்து, அவரை எழுப்பவேண்டாம் எனக் கூறி விட்டு கணவன், மனைவியுடன் தமது அறையில் நித்திரைக்குச் சென்றுள்ளார்.

இதன் பின்னர் அடுத்த நாள் 29ஆம் திகதி காலையில் யுவதி அறையில் இருந்து வெளிவராத நிலையில் அறைக்கு சென்று சிறுமியை எழுப்பப் முற்பட்ட போது சிறுமியின் வாயில் நுரையும், இரத்தமும் வெளியேறியிருப்பதைக் கண்டு உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலத்தை பார்வையிட்ட பொலிசார் நீதிமன்ற அனுமதியை பெற்று பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்தனர். இதனை தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை பிரேத பரிசோதனையை மேற்கொண்ட சட்டவைத்திய அதிகாரி யுவதியின் தலையிலும், முதுகுபகுதியிலும் தாக்குதல் நடந்து இருப்பதாகவும் இதன் காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை பொலிஸாருக்கு வழங்கியமையை அடுத்து யுவதியின் சகோதரியின் கணவரை (வயது 28) நேற்றுக் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மறைத்து வைக்கப்பட்டிருந்த வன்தட்டை மீட்ட பொலிஸார் அதனை சோதனையிட்டபோது அதில் முதலில் மனைவியை ஏற்றி செல்வதும், பின்னர் குறித்த யுவதியை ஏற்றிச் சென்று சுமார் 5 நிமிடத்தில் திரும்ப அவரை சடலமாக கொண்டு வருவதும் வீடியோ காட்சிகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்து பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுப்பு!

இலங்கையிலுள்ள நியூஸிலாந்து பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள நியூஸிலாந்து தூதரகத்தால் இவ்வாறு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு வருவதாகவும் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நீண்ட நேர மின் விநியோகத் தடை முன்னெடுக்கப்படுவதாகவும் நியூஸிலாந்து தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதாகவும் இலங்கையிலுள்ள நியூஸிலாந்து தூதரகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையிலுள்ள நியூஸிலாந்து பிரஜைகள் அவசர நிலைமைகளின் போது நியூஸிலாந்து தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை சரியான நேரத்தில் முன்வைப்போம்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இழந்தால் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இன்று மக்கள் எதிர்நோக்கும் கடும் சிரமங்களால் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவிதார்.

மேலும் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிக்கையில் –

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை இடைக்கால அரசாங்கத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் .

இதேவேளை சரியான நேரத்தில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதோடு தேர்தலில் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைக்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாளை திங்கட்கிழமை முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை?

நாளை திங்கட்கிழமை முதல், முன்கூட்டிய பாடசாலைகளுக்கு விடுமுறையை அறிவிக்குமாறு கல்வி அமைச்சுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால், இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நீண்ட மின் தடை காரணமாக பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளமையால் இவ்வாறு பரிந்துரை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பஸ் விபத்தில் ஒருவர் பலி சாரதிக்கு விளக்கமறியலில்

கிண்ணியாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்புக்கு காரணமான பஸ்ஸின் சாரதியை இம்மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

திருகோணமலை கும்புகார் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் உயரிழந்தவர் கிண்ணியா தள வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராகக் கடமையாற்றி வந்த ரஞ்சுதன் ஜோதிமணி வயது 43 என பொலிஸார் தெரிவித்தனர்.


இச்சம்பவம் வியாழன் மாலை திருகோணமலை – மட்டக்களப்பு பிரான வீதி, உப்பாற்று சிறுவர் பூங்காவிற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

முன்னால் சென்று கொண்டிருந்த தனியார் சுற்றுலா பஸ் வண்டியை முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதியை கைது செய்த பொலிஸார் திருகோணமலை நீதிவானின் இல்லத்தில் முன்னிலைப் படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சபாநாயகர் கட்சிசார்ந்து சிந்திக்காமல் நீதியின் பக்கம் செயற்படுதல் வேண்டும்!

## இரா.சாணக்கியன் ஆலோசனை





சபாநாயகர் குழுவிலுள்ளவர்கள் கட்சி சார்ந்து சிந்திக்காமல், நீதியின் பக்கம் நின்று செயற்படுபவர்களாக இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சபாநாயகர் குழுவிலுள்ள 12 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான இரண்டு நாள் செயலமர்வு கொழும்பில் இடம்பெற்றது. பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

இந்தநிலையில் செயலமர்வில் பங்கேற்றிருந்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது ஆசனத்தில் இருப்போர், தாங்கள் அங்கம் வகிக்கும் கட்சி சார்ந்து சிந்திப்பவர்களாக இருக்கக் கூடாது எனவும் சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

# தோற்றது நாட்டின் பொருளாதாரம் அல்ல இந்த அரசாங்கத்தின் இனவாதமேயாகும்!

## சேயோன் தெரிவிப்பு

இன்று தோற்றிருப்பது நாட்டின் பொருளாதாரமோ ஏனைய விடயங்களோ அல்ல. இந்த அரசாங்கத்தின் இனவாதமே தோற்றிருக்கின்றது என்பதே இன்று நாட்டின் நிலைமை சொல்லும் உண்மையான செய்தி என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவரும், கோறளைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினருமான கி.சேயோன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 124 ஆவது ஜனன தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது இந்த நாட்டின் அரசாங்கம் பொருளாதாரக் கொள்கையில் தோல்வியடைந்து நாட்டை நிர்வகிக்க முடியாமல் இருக்கின்றது. இன்று தோற்றிருப்பது பொருளாதாரமோ ஏனைய விடயங்களோ அல்ல. இந்த அரசாங்கத்தின் இனவாதமே தோற்றிருக்கின்றது என்பதே இன்று நாட்டின் நிலைமை சொல்லும் உண்மையான செய்தி.

அவ்வாறு அரசில் இருந்து இனவாதம் பேசிய சிலர் அரசிலிருந்து வெளியில் வந்து தொடர்ந்தும் இனவாதத்தைப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று இவ்வாறான இனவாதிகளை எந்த சிங்களத் தலைவர்களும் ஏற்றுக் கொள்கின்ற நிலையில் இல்லை.

அன்று ஆயுதத்தால் சாதிக்க முடியாத விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று டொலரால் சாதிக்கப் பார்க்கின்றது என்ற கருத்துகளும் அந்த இனவாதிகளால் வெளியிடப்படுகின்றன. இவ்வாறான செய்திகளை இங்கிருக்கின்ற எமது தமிழ்த் தரப்புகள் விளங்கிக் கொள்ள வேண்டும். இத்தகைய அரசியல் சூழலை எவ்வாறு கையாள வேண்டும் என்ற ஞானம் இருக்க வேண்டும். இவ்வாறு எமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இருக்கின்ற சூழ்நிலைகளை எமது தமிழ்த் தரப்புகள் உதறித்தள்ளிவிட்டு செல்லக் கூடாது. அனைவரும் கைகோர்த்து எமது உரிமைப் போராட்டத்துக்கு ஒன்றாக இருக்க வேண்டும்.

நல்லாட்சிக் காலத்தில் அரசமைப்பின் இடைக்கால அறிக்கை வருகின்ற போது இதில் சமஷ்டி விடயம் இருக்கின்றமை தொடர்பில் உதய கம்மன்பில போன்ற இனவாதிகள் சுட்டிக் காட்டினர். ஆனால் அன்று இந்த நடைமுறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது சில தமிழ்த் தரப்புகளே எதிர்த்திருந்தார்கள். அவ்வாறான நிலைமைகள் மாற வேண்டும்.

இன்றும் இந்த அரசாங்கத்தின் மனோநிலை மாறவில்லை என்பதற்கு உதாரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் யாழில் பொலிஸாரால் தாக்கப்பட்ட விடயம் இருக்கின்றது. இந்த விடயத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. இது தொடர்பில் நீதிக்கான போராட்டம் எதிர் வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் இருந்தால் அதற்கு எமது வாலிபர் முன்னணி பூரண ஆதரவையும் வழங்கும்.

தற்போதைய நிலைமையில் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு இராஜதந்திர நடைமுறை வேண்டும். அதனைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு செய்து கொண்டிருக்கின்றது. அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் தங்களுடைய தனிப்பட்ட எண்ணங்கள் – சிந்தனைகளையெல்லாம் விடுத்து மக்களுக்காக ஒன்றிணைய வேண்டும். – என்று தெரிவித்தார்.



# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் திருகோணமலையில் சாவு

திருகோணமலை, ஏப்.03

திருகோணமலை – கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் காரில் பயணித்த அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார் என ஹதரஸ் கொட்டுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதியான்சலாகே குணதிலக்க பண்டார யகம்பத் (வயது – 48) என்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனமும், காரும் மோதியே இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கண்டியிலிருந்து கந்தளாய் பகுதிக்குச் சென்ற காரும் கந்தளாயில் இருந்து ஹபரணைக்குச் சென்ற டிப்பர் வாகனமுமே இவ்வாறு விபத்துத்துக்குள்ளாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விடுமுறையில் சென்று திரும்பி வரும் போதே இவ்வாறு விபத்துக்குள்ளாகி அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சடலம் தம்புள்ளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காணாமலாக்கப்பட்ட உறவுகள் மீது தாக்குதல் போராட்டத்துக்கு முன்னணியும் அழைப்பு!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது தாய்மார்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டமையைக் கண்டித்து இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்து பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு–

ஶ்ரீலங்காவின் ஆயுதப்படைகளாலும் துணை இராணுவக் குழுக்களலும் பல ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

குறிப்பாக 2009 மே மாதம் இனவழிப்பு யுத்தத்தின் முடிவில் – சிறிலங்கா ஆயுதப்படைகளிடம் சரணடைந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியையும் பொறுப்புக் கூறலையும் எதிர்பார்த்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் சிறிலங்காவில் நடைபெறப்போவதில்லை என்பதால் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை ஒன்றினூடாக – இந்த குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் மூலமாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாகவோ விசாரிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திவருகின்றனர்.

இத்தகைய பின்னணியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்குக் காரணமான அரசின் அப்போதைய ஜனாதிபதி (தற்போதய பிரதமர்) கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதந்தார். அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022.03.20ஆம் திகதியன்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் ஜனநாயக வழியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தப் போராட்டத்துக்காகச் சென்றிருந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களைச் சேர்ந்த வயது முதிர்ந்த தாய்மார்கள் மற்றும் பெண்கள் மீது ஶ்ரீலங்கா பொலிஸார் மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தி, அவர்களில் சிலரது ஆடைகள் கிழிக்கப்பட்டமையுடன், காயப்படுத்தப்பட்டிருந்தனர்.

ஜனநாயக ரீதியாகப் போராடிவரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மீது ஶ்ரீலங்காப் பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்திருந்தது.

அதேவேளை, ஶ்ரீலங்கா பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனத்தைக் கண்டித்தும், நீதி வேண்டிப் போராடும் உறவினர்களின் நியாயமான கோரிக்கைகளை வலுப்படுத்தும் வகையிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கண்டனப் பேரணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பூரண ஆதரவை வழங்கியிருந்தது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் நீதிக்காக போராட வேண்டியது ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்தினது பொறுப்பாகும். அந்தக் கடமையை உணர்ந்தவர்களாக நாம் செயற்படுவோம். – என்றுள்ளது.

இன்று நடைபெறவிருந்த போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2022இல் வெளியிடப்பெற்றது.